eglstered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELA NADU

EELANADU

தபால் பெட்டி எண் 49
ஃபோன் 389
National Tamil Daily
மலர் 11
இதழ் 214
தேசிய தினசரி

யாழ்ப்பாணம ஆவணி 29 றஜப் 1 ஞாயிற்றுக்கிழமை (14-9-69)

# யாழ் மாவட்டத்தில் ஏழைப்பிள்ளைகளுக்கு புனர்வாழ்வு

## கொடித்தினம் கலை விழாக்கள் நடாத்தவும் ஏற்பாடு

— நமது காரியாலய நிருபர் "திரு" —

யாழ்ப்பாணம், ஞாயிறு

**பெற்ருேர், உறவினர், கவனிப்பபார் யாருமில்லாமல் கல்வி வசதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு விடிவு கிடைக்கவிருக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஏழைக் குழந்தைகளின் நலன்களை யாழ்ப்பாண அனுதைக் குழந்தைகள் கண்காணிப்புச் சபை ஒன்று விரைவில் நிறுவப்படவிருக்கின்றது.**

ஏழைக் குழந்தைகளுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கான ஆலோசனைக் கூட்டமொன்று இம்மாதம் 19-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது. இதன் முன்னேடி நடவடிக்கையாக இதில் சம்பந்தப்பட்ட சில முக்கிய பிரமுகர்கள் நேற்று முன்தினம் மாலை திருநெல்வேலியுள்ள அனுதைப் பிள்ளைகள் விடுதியைச் சென்று பார்வையிட்டனர்.

அனுதைக் குழந்தைகள் கண்காணிப்பு இயக்கம் நிறுவப்பட்டதும் அது தன் முதலாவது நடவடிக்கையாக தற்பொது சைவ அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் திருநெல்வேலி அனுதைக் குழந்தைகள் விடுதியைப் பொறுப்பேற்கும்.

இங்கு 120 பெண் குழந்தைகளும், 35 ஆண்குழந்தைகளும் தற்போது கல்வி, கற்றுவருகின்றனர். ஒவ்வொரு வருக்கும் மாதம் ஒன்றிற்கு ரூபா 25 வீதம் வருடத்திற்கு 300 ரூபா மட்டுமே அரசாங்கம் நன்கொடையாக வழங்குகின்றது.

இப்பணம் இவர்களுக்கு உணவுக்கே போதாதிருப்பதால் இந்த போடர், இராஜரத்தினத்தின் ஒத்துழைப்புடன் இப்புதிய இயக்கத்தை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான ஆலோசனைக் கூட்டத்தை நடாத்தி 365 ஆயுள்கால அங்கத்தவர்களை சேர்த்து, அனுதைக் குழந்தைகள்விடுதியின் ஒவ்வொரு நாள் செலவையும், ஒவ்வொரு அங்கத்தவரிடம் ஒப்படைப்பதே இந்த இயக்கத்தை நிறுவுவதின் முக்கிய நோக்கமாகும் அரசாங்கம் கொடுக்கும் நன்கொடைப் பணத்தைவிட தினசரி மேலதிகச் செலவாக சுமார் 200 ரூபாவரை செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு நிதிசேகரிப்பதற்காக பாடசாலைகள் தோறும் கொடித்தினம் கொண்டாடுவது, யாழ்ப்பாண மாவட்டத்தில் கலைவிழா ஆகியனவற்றை நடாத்துவது ஆகியனவும் இதன் அமைப்புத் திட்டங்களாகும்.

—

கோட்டை, சனி

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதிவரையில் 51480 இந்திய வம்சாவளியினர் இந்திய பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளப் பட்டிருக்கிறுர்கள்.




பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

# நள்ளிரவுமுதல் பூரணஅவசரகாலச் சட்டம் அமுலாகியது

## நாடெங்கிலும் மின்சார விநியோகம் ஸ்தம்பிதம்

கோட்டை, ஞாயிறு

**நேற்று நள்ளிரவுமுதல் பூரண அவசர காலச் சட்டத்தை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.**

அத்துடன் மின்சாரசபை பெற்ருேலியம் கூட்டுஸ்தாபனம் ஆகியன நேற்றுநள்ளிரவுமுதல் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

நாடெங்கிலுமுள்ள மின்சார இலாகா ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்திருக்கிறுர்கள். இதனுல் நேற்று மாலையிலிருந்து நாடு பூராவிலும்மின்சார விநியோகம் ஸ்தம்பிதத்துக்குள்ளாகியது. ராணுவ

## காங்கிரஸ் பிளவை போக்க உழையுங்கள்

### இந்திரா வேண்டுகோள்

கல்கத்தா, செப். 13

காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு இருக்கிறது என பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கல்கத்தாவில் தெரிவித்தார்.

திருமதிகாந்தி மேலும் பேசுகையில் இவ்வித பிளவு வளர விடப்படாமல் இதனைப் போக்கி ஐக்கியப்படக் கூடிய வழிவகைகளை கையாள வேண்டும் என தமது கட்சியைச் சேர்ந்தவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

கல்கத்தாவுக்கு வந்த திருமதி இந்திராவுக்குகல்கத்தா மக்கள் பெரும் வரவேற்பளித்தனர்.

மக்கள் மத்தியில் திருமதி[illegible]டிற்கு பல துறைகளில் உதவியுள்ளார்களென்றும் வங்காள மக்கள் தமது சக்தியை பசிப்பிணியை ஒழிக்கவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும்ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கவும் பயன்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க உருவாக்கப்படவிருக்கும் திட்டம் இப்பிரச்னைக்கு தீர்வு காண பெரிதும் உதவும் என்றும் அவர் எடுத்துக் கூறினுர்.

## தீப்பற்றி இளம்பெண் மரணம்

யாழ்ப்பாணம், சனி

மண்ணெண்ணை குக்கரிலிருந்து திடீரென பற்றிக் கொண்ட நெருப்பு இளம் பெண்ணின் உயிரைப் பலி கொண்டது.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச்சேர்ந்த கந்தையா கண்மணி (வயது 19) என்ற இளம்பெண்ணே இப்பரிதாப மரணத்துக்குள்ளாஞர்.

இவர் தீப்பிடித்த நிலையில் இம்மாதம் 11ந் திகதி யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆஸ்பத்திரியில் இன்று இவர் மரணமாஞர். மரண விசாரணை அதிகாரி திரு. என். இராஜநாயகம் மரணவிசாரணை நடத்திஞர். விபத்து

## பெற்ருேலியம்கூட்டுஸ்தாபன ஊழியரும்வேலை நிறுத்தம்

கொழும்பு, சனி

பெற்ருேலியம் கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தத்தில் இறங்கிஞர்கள். பெற்ருேலியம்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 5 தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் இந்தவேலை நிறுத்தத்தில் கலந்து கொள்கிருர்கள்.

மின்சார இலாகா ஊழியர்களும் இன்று பிற்பகல்வேலை[illegible]தொழிற்சாலைகளில் வேலைகள்ஸ்தம்பிதமாகின, இன்று பிற்பகல் கூடிய மக்கள் பிரதிநிதிகள் சபை அலுவல்களும் மின்சார ஊழியர் வேலைநிறுத்தம் காரணமாக தடைபட்டது,

இந்த வேலைநிறுத்தங்கள் நீடிக்குமாஞல் மின்சார பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதுபோக பெட்ரோல் மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கட்சியைச் சேர்ந்தவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

கல்கத்தாவுக்கு வந்த திருமதி இந்திராவுக்குகல்கத்தா மக்கள் பெரும் வரவேற்பளித்தனர்.

மக்கள் மத்தியில் திருமதி இந்திராகாந்தி பேசுகையில், வங்காள மக்கள் நாட்

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க உருவாக்கப்படவிருக்கும் திட்டம் இப்பிரச்னைக்கு தீர்வு காண பெரிதும் உதவும் என்றும் அவர் எடுத்துக் கூறினர்.

இம்மாதம் 11ந் திகதி யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆஸ்பத்திரியில் இன்று இவர் மரணமானர். மரண விசாரணை அதிகாரி திரு. என். இராஜநாயகம் மரணவிசாரணை நடத்தினர். விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

நேற்றுநள்ளிரவுமுதல் அத்தியாவசிய[illegible] சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

நாடெங்கிலுமுள்ள மின்சார இலாகா ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்திருக்கிருர்கள். இதனுல் நேற்று மாலையிலிருந்து நாடு பூராவிலும்மின்சார விநியோகம் ஸ்தம்பிதத்துக்குள்ளாகியது. ராணுவ கடற்படையினர் அவசர சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மின்சார விநியோகம் தடைப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர், ஆஸ்பத்திரிகளில் சத்திரசிகிச்சைக்குள்ளாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நோயாளிகள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதாகவும் நோயாளிகளின் அவசர தேவைக்கு என குளிர்பெட்டியில் வைக்கப்பட்ட பல லட்சக்கணக்கான மருந்துகள் பழுதடையும் நிலையிலிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது,

கொழும்பு நகரில் தண்ணீர் விநியோகம் தடைப்படும் கட்டத்தை எதிர்நோக்குவதாக செய்திகள் தெரிவித்தன. கழிவுப் பொருட்கள் களனி ஆற்றில் தள்ளப்படுகிறது. தொலைபேசித்தொடர்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொது ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், தியேட்டர்கள்போன்றவைகள் பலமாக பாதிக்கப்பட்டுள்ளன.

சம்பளக் கோரிக்கைசம்பந்தமாகவே இவர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்திருப்பதாகத் தெரிகிறது. முகாமையாளர்களிடம் பிரதிநிதிகள் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடாத்தினர்கள், ஆனல் இன்று திடீரெனப் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. வடபகுதியில் பூராவும் நேற்று இரவு முழுவதும் இருளில் மூழ்கியது, சுன்னுகம் மின்சார இலாகாவுக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் அறிய முயன்றபோது அங்கிருந்து எவ்வித பதிலும்கிடைக்கவில்லை. நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் இரு தியேட்டர்களில் மட்டும் படங்கள் ஓடியது.

ஞர்கள். பெற்ருேலியம்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 5 தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் இந்தவேலைநிறுத்தத்தில் கலந்து கொள்கிருர்கள்.

மின்சார இலாகா ஊழியர்களும் இன்று பிற்பகல்வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள் மின்சார ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் இன்று காலையில் கூடி ஆலோசித்த பின்னர் வேலை நிறுத்தத்தில் இறங்கினுர்கள்,

மின்சார ஊழியர் வேலைநிறுத்தம் காரணமாக நகரின்பல பாகங்களிலும் களும் மின்சார ஊழியர் வேலைநிறுத்தம் காரணமாக தடைபட்டது,

இந்த வேலைநிறுத்தங்கள் நீடிக்குமானுல் மின்சார பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதுபோக பெட்ரோல் மண்ணெண்ணைத் தட்டுப்பாடும் ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது,

கொழும்பு நகரில் ஆயுதம் தாங்கிய பொலிசார் முக்கிய இடங்களில் காவல் புரிகின்றனர்,

துப்பாக்கி ரவைகள் வெடித்தன

# சுங்கப்பகுதியினர் கீரிமலை கடலில் நடத்திய வேட்டை

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், ஞாயிறு கீரிமலைக்கடலில் நேற்று முன்தினமிரவு துப்பாக்கி ரவைகள் ஐந்து தடவைகள் வெடித்தன. ஊர்காவற்றுறை சுங்கப்பகுதியினர் படகொன்றைப் பிடிப்பதற்காக ஒரு மணி நேரம் நடத்திய போராட்டம் பயனளிக்காததைதொடர்ந்து ஆகாயத்தை நோக்கி சுங்கப்பகுதியினர் சுட்டனர். இதனைத்தொடர்ந்து குறிப்பிட்டபடகை சுங்கப் பகுதியினர் வளைத்துப் பிடித்தனர்.

ஒருமணிநேரம் கலைத்த பின்னரே இந்த யந்திரப் படகைப்பிடித்ததாகத்தெரிவிக்கப்பட்டது 1 லட்சம் ரூபாபெறுமதியான பொருட்களையும் யந்திரப்படகையும் சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர். சந்தேகத்தின் பேரில் ஐவரை பொலிசார் கைது செய்தனர்.

ஊர்காவற்றுறை சுங்கப் பகுதி சப் கலெக்டர் திரு செல்லையாவின் தலைமையில் சென்ற கோஷ்டியினரே இப் படகை வளைத்துப் பிடித்தனர்,

சுமார் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சாறிகளும் 15 ஆயிரம் ரூபாய் மீன்பிடி வலைகளும் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான அலங்காரப் பொருட்களும் இருந்ததாக தெரியவருகிறது.

# முருங்கன் காட்டில் கிடந்த மனிதசடலம் பெண்ணினதா?

மன்னர், சனி

முருங்கன் கட்டுக்கரை பகுதி காட்டில் கண்டுபிடிக்கப்பட்ட எரியுண்ட மனித எலும்புகள் ஒருபெண்ணினுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது கருகிய எலும்புகள் மீது நடத்தப்பட்ட வைத்திய பரிசோதனையில் இருந்து இத்தகவல் தெரியவந்துள்ளது

காட்டுக்குள் மாடுகள் தேடிச் சென்ற பெருமாள் கருப்பையா என்பவரதுஉடலாக இருக்கலாமென ஏற்கனவே சந்தேகிக்கப்பட்டு பள்ளை கைதாகி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர் இப்போது கிடைத்த வைத்திய அறிக்கை பொலிசாரை தலையிடிக்கு உள்ளாக்கிவிட்டது பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டாராஎன்ற அச்சம் பொலிஸ் வட்டாரத்தில் எழுந்துள்ளது,

## மகேஸ்வர பூசை

சுழிபுரம், சனி

கடைசி ஆவணி ஞாயிருன இம் மாதம் 14ம் திகதி பொன்னலை வரதராசப் பெருமாள் கோவில் விசேட அபிஷேக ஆராதனைகளும் மகேஸ்வர பூசையும்பண்ணிசைக் கச்சேரி முதலியனஉம் நடைபெற விருக்கின்றன.

## இயற்கை மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திடீரென மயக்கமுற்று மரணமான தாளையடியைச் சேர்ந்த சவரிமுத்து மரியமுத்துவின் மரணம் பற்றி விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் இயற்கை மரணம் என்று தீர்ப்பளித்தார்.

(கா. நி.)

சுங்கக்காரியாலய கொள்ளை:

# தகவலுக்கு இரண்டுவெகுமதி; திக்குத்திக்காக விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் சுங்க காரியாலயக் கொள்ளை சம்பந்தமாகத் தகவல் கொடுப்பவர்களுக்கு பொலிஸ் பகுதியினரைத் தவிர சுங்கப்பகுதியினரும் இப்போது வெகுமதி கொடுக்க முன்வந்துள்ளனர்.

பொலிசார் நடத்தும் விசாரணையைத் தவிர சுங்கப் பகுதியினரும் கொழும்பில் பிரத்தியேக விசாரணையை நடாத்திவருகின்றனர்.

நேற்றுமாலை இதுசம்பந்தமாகக் கிடைத்த ரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ்பகுதி இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசூரியா தலைமையில் பொலிஸ் கோஷ்டியொன்று கொழும்புக்குச் சென்றுள்ளது.

சந்தேக நபர்கள் இருவர் இவ்வாரத்தில் அகப்படக்கூடும் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி.)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியின் புதிய மாடிக் கட்டிடத் திறப்புவிழா அடுத்தமாதம் 1-ம் திகதி திறந்துவைக்கப்படவிருக்கின்றது. (கா. நி)

வடபகுதி அசைஸ் விசாரணை

# கரவெட்டி கொலை முயற்சி வழக்கு எதிரிகள் நால்வரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு கரவெட்டி கொலைமுயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர். ஜூரி சபையினர் விசாரணை நடுவில் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்தபின் எதிரிகள் நால்வரும் குற்றவாளிகளல்லவென்று தெரிவித்ததை தொடர்ந்து நீதியரசர் எதிரிகளை விடுதலை செய்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கரவெட்டியில் 68-ம்ஆண்டு மே மாதம் 10- திகதி தம்பையா வைத்திலிங்கம், தம்பையா மாணிக்கம், வைத்திலிங்கம். தவலிங்கம் வைத்திலிங்கம் தர்மலிங்கம், ஆகியோர், சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை, புறக்டர் கே. கே. பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

முருகுப்பிள்ளை கந்தையா பேரம்பலம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரிகள் நால்வரையும் தெரியும் 1-ம், 2-ம் எதிரிகள் சகோதரர்கள் 3-ம், 4-ம் எதிரிகள் 1-ம் எதிரியின் பிள்ளைகள். சம்பவம் நடந்ததினம் தான் வீட்டில் இருக்கும் போது, இரவு 8 மணிக்கு என் வீட்டிற்குப் பின்பக்கத்தில் இரண்டு பேர் தாக்கப்பட்டுக்கேட்டது. அவர்களின் குரலில் மட்டுக்கட்டவில்லை. நேரில் சென்று வேலி ஓரமாக நின்று நிலத்தில் டோச்லைட்டை அடித்து அவர்களை அடையாளம் கண்டுகொண்டேன். 1-ம் எதிரி வைத்திலிங்கமும், காயமடைந்த சுப்பிரமணியமும்தாக்கப்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சு கேட்டது. முதலில் விளங்கவில்லை. பின்னர் விளங்கியது. 'வந்திட்டான் வாடுங்கோடா' என்று 1-ம் எதிரி கூறினர். வேறு ஒன்றும் கேட்கவில்லை. ஓடிவந்த 4-ம்எதிரி காயமடைந்தவர் முகத்தில் டோர்ச்லைட் அடித்தார். 1-ம் எதிரி வைத்திலிங்கம், சுப்பிரமணியத்தை கோடரியால் வெட்டினர்: 4-ம் எதிரி அடித்த டோர்ச்லைட் வெளிச்சத்தில் கண்டேன். பின் நான் குளறிக்கொண்டு ஓடிவிட்டேன். வேறு ஆட்கள் வந்ததை நான் காணவில்லை. அவரது மச்சான் பவராசாவிற்கு நடந்த சம்பவத்தை சொல்லப் போனேன். தவராசாவும் நானும் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தோம். காயமடைந்தவர் சம்பவம் நடந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் கிடந்தார்.

நானும் தவராசாவும் காரில் பொலிசுக்குப் போனேம். பொலிஸார் காயமடைந்தவரைக் கொண்டு வரச்சொன்னர். நாங்கள் திரும்பிவந்து காயமடைந்தவரை பொலிஸ்நிலையத்திற்குக்கொண்டு சென்ரேம் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனேம். நாங்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தபோது எதிரிகள் இல்லை. வாக்குமூலத்தை அடுத்தநாள் பொலிசாருக்குக் கொடுத்தேன்.

கீரிமலை அபிவிருத்தித்திட்டத்துக்கு

# ஒரே நேரத்தில் அருகருகில் ஆதரவு, எதிர்ப்புக் கூட்டம்

அளவெட்டி, சனி

கீரிமலை அபிவிருத்திக்கான ஆதரவுக்கூட்டமும் எதிர்ப்புக்கூட்டமும்ஒரேநேரத்தில் அருகருகாமையில் நடந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு கீரிமலையில் நடைபெற்றது.

ஆதரவுக் கூட்டத்துக்குத் தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதனும், எதிர்ப்புக்கூட்டம் வவுனியா, முன்னாள் எம். பி. திரு. ஸி சுந்தரலிங்கம் தலைமையிலும் நடைபெற்றது

கீரிமலை அபிவிருத்தி நிதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பியவர்களுக்கு திரு. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேச அனுமதி வழங்கப்படாததாலேயே இவர்கள் பிரிந்து சென்று எதிர்ப்புக்கூட்டம் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் கீரிமலை அபிவிருத்தி நிதிக்குப்பணம் கொடுக்கக்கூடாதென்றும், கதிரமலைக்கந்தனுக்கு வந்த கதி கீரிமலைக்கு நேராமல் தடுக்கவேண்டுமென்றும் இரண்டு தீர்மானங்கள் திரு. ஸி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## 3 புதிய கடதாசி ஆலைகள்

கோட்டை, சனி

கிழக்கிலங்கைக் கடதாசிக் கூட்டுஸ்தாபனம் 3 புதிய கடதாசி உற்பத்தி ஆலைகளை நிறுவவுள்ளது.

கொழும்பு, ராஜங்கனை, உடவளவா ஆகிய 3 இடங்களிலும் முறையே 'ரிஸுத் தாள்கள், காட்போட், எழுத்துத் தாள்கள் ஆகியன உற்பத்தி செய்யப்படும்.

## ஆடு திருட்டு ஐவர் கைது

மட்டுவில், ஞாயிறு

மட்டுவில் பகுதியில் நடந்த ஆடு திருட்டு சம்பந்தமாக, சாவகச்சேரி பொலிசார் இரு தபால் சேவகர் உட்பட ஐவரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். திருட்டுபோன ஆடு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

தாங்கள் வெளவால் வேட்டைக்கு சென்றதாக, சந்தேகநபர்கள் பொலிசாருக்கு கூறியதாக அறியப்படுகிறது இச் சம்பவத்தையொட்டி துவக்கு உட்பட பயங்கர ஆயுதங்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனராம்.

# வடக்கில் மேலும் தபால் நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு வடபகுதியில் வெகுவிரைவில் சுமார் 29 உபதபால் நிலையங்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கிலுள்ள பதினெரு தொகுதிகளிலும் இந்த 29 உபதபால் நிலையங்களும் அடுத்த நிதியாண்டு முடியுமுன் திறக்கப்படும்.

தபால்பட்டுவாடா, தபால் விநியோகம், தந்தி சேகரிப்பு போன்ற வேலைகளை கிராமங்களிலும் தாமதமின்றிச் செய்யவும், ராம மக்களுக்கும் கூடிய சலுகைகளையும் வழங்கவே இந்த நடவடிக்கைகளைத் தபால் தந்தி அமைச்சு இப்போது மேற்கொண்டுள்ளது.

வடபகுதியிலுள்ள தபால் நிலைய அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களைக் கொண்ட மாநாடொன்றைக் கூட்டி இதுசம்பந்தமாக ஆராய போஸ்ட் மாஸ்டர் ஜெனரலான திரு. வேர்ணன் அபயசேகரா அடுத்தமாதம் யாழ்ப்பாணம் வரவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

## ஆண் லிகிதர்

கூட்டுறவுச் சங்கத்திற்கு ஓர் ஆண்லிகிதர் கீழ்காணும் தகைமையுடன் தேவை.

1. வயது: 30-ற்கு மேல்
2. தராதரம்: கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணம்).
3. கூட்டுறவுப்பயிற்சியும், ஆங்கில அறிவும், வியாபார அனுபவமும் விரும்பத்தக்கது.
4. நற்சாட்சிப் பத்திரம் இரண்டு சமர்ப்பிக்க வேண்டும்.
5. பிணை — ரொக்கம் ரூ. 500 - அல்லது ஆதனப் பிணை ரூ. 1000/-
6. மாத வேதனம்:- ரூ 100/- — ரூ. 150/- / 10 X ரூ 5/-
7. விண்ணப்பம் ஏற்கப்படும்கடைசித் தேதி 25-9-69
8. கூட்டுறவுச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் சங்கத்தின் உபவிதிகளுக்கும் அமைய நடத்தல் வேண்டும்

விண்ணப்பிக்கும் விலாசம்:

கௌரவ காரியதரிசி,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
மெயின் வீதி.
பருத்தித்துறை.

12-9-69.　　　1749

# 'வெங்காய உற்பத்தியாளர் மீது அரசாங்கம் அக்கறை இல்லை'

அளவெட்டி, சனி

'இலங்கையின் நாணய மதிப்பாலும், அன்னிய செலவாணியாலும் பொருட்களின் விலை விஷம் போல் ஏறி வரும் வேளையில் விவசாயிகள் பாடுபட்டு விளைவிக்கும் வெங்காயத்தின் உத்தரவாத விலையை அரசாங்கம் கூட்டாமல் இருப்பது கவலைக்குரியது'' என கோப்பாய் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. இ. குமாரசாமி சங்க விசேட கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

''அந்நிய செலவாணியாலும் நாணய மதிப்பாலும் காணியின் குத்தகை 60 ரூபாயிலிருந்து 65 ரூபாவாக உயர்த்தப் பட்டுள்ளது. இறைப்பு கூலியும் 60 ரூபாவிலிருந்து 80ரூபாவாக உயர்ந்துள்ளது. மற்றும் கூலி வேலைகளுக்கான பணமும் 5 ரூபாயிலிருந்து 6 ரூபாவாகியுள்ளது. இதை யாவது அரசாங்கம் கவனித்து வெங்காய உத்தரவாத விலையை அதிகரிக்க வேண்டுமென கேட்கின்றேம்'' என்றும் அவர் தொடர்ந்து பேசினார்.

பின்வரும் தீதமானங்களும் நிறைவேறின.

வெங்காயத்தின் உத்தரவாதவிலையைஅரசாங்கம்ஆக குறைந்தது ருத்தலுகக்கு 3 சதமாக உயர்த்த வேண்டும்.

கோப்பாயில் வாழும் மக்கள் விவசாயம் செய்ய நிலம் இல்லாது கஷ்டம் அடைகின்றனர். ஆகவே இந்த நிலங்களை திருத்தி விவசாயத்துக்கு உதவ வேண்டும்.

5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கற்பாறைகள் உடைக்கப்பட்டது போலவே இப்போதும் இங்கு நிகழ்கிறது. ஆதலால் தரிசு நிலங்களாக கிடக்கும் சுமார் 100 ஏக்கரில் உள்ள பாறைகளை உடைக்க இயந்திர சாதனங்களை அரசாங்கம் கொடுத்துதவ வேண்டும்.

இம் மூன்று தீர்மானங்களையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விவசாய கூட்டுறவு மகாநாட்டில் சமர்ப்பிப்பதென முடிவு செய்யப்பட்டது.

## வாமசெல்வாஸ் சீட்டிழுப்பு முடிவுகள்

1. இல. 01156 R.சாசினி பருத்தித்துறை ரோட்.
2. இல. 00065 திருமதி. இராசரத்தினம், செட்டித் தெரு.
3. இல 00274 திருமதி. கமலாம்பிகை, நாவலர் ரோட்.

1750

## சாட்டி (வேலணை) சிந்தாத்திரை மாதா திருநாள்

மேற்படி திருநாள் இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகி 23-ம் திகதி மாலை திவ்விய சற்பிரசாத சுற்றுப் பிரகாரத்துடனும் 24-ம் திகதி காலை பெரியபாடற் பூசையுடனும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவடையும். யாத்திரீகர்களின் வசதிக்காக 23-ம் திகதி மாலையும் 24-ம் திகதி காலையும் ஊர்காவற்றுறையிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் கோவிலடிக்குப் பஸ்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

குருமனை　　　எஸ். ஏ. ஞானப்பிரகாசம்,
மண்டைதீவு.　　　கட்டளைக்குரவர்.
7-9-69.　　　1737

72-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்




கதை-வசனம்: துறையூர் மூர்த்தி　பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

ராணி　　　தீவாலி　ஜெயலலிதா

## 12-வது ஆண்டு விழா

அளவெட்டி, சனி

இணுவில் இளந்தாள் கோவில் சனசமூக நிலைய 12-வது ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. இ. நாகலிங்கம் தலைமையில் நிகழ்ந்த இக் கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. நாகலிங்கம் உப தலைவர் திரு. இ. பொன்னம்பலம் செயலாளர் திரு. கா நடராசா உபசெயலாளர் திரு. சி. கேதீஸ்வரன் தனாதிகாரி திரு. சி. சிவலோகநாதன் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது கிராம சபைத் தலைவர் திரு. ச. மூத்துலிங்கமும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## குருநாகலையை

# தீவுப் பகுதி செய்திகள்

### கோரிக்கை

அல்லைப்பிட்டி, சனி

பின்தங்கிய இடமாகிய அல்லைப்பிட்டிப் பகுதிககு ஓர் அரசினர் வைத்தியசாலை இல்லாததினல் இப்பகுதி மக்கள் மிகுந்தசிரமம் அடைகின்றார்கள். எனவே இப் பகுதிக்கு உடனடியாக ஓர் வைத்தியசாலைநிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். மேற்கண்டவாறு தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ நவரத்தினத்தை கடித மூலம் கேட்டுள்ளார்.

### கிளித்தட்டு

வேலணைப் புதிய விளையாட்டு மைதானத் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற கிளித்தட்டுப் போட்டியில் வேலணை தேவி கோட்டவிளையாட்டுக்கோஷ்டியும், வேலணை தெரிவுக் கோஷ்டியும் மோதிக்கொண்டன. ஈற்றில் 5—2 புள்ளிகளால் வேலணை தேவி கோட்டம் தெரிவுக் கோஷ்டியைத்தோற்கடித்தது. இப் போட்டிக்கு வடபகுதி உள்ளூராட்சி ஆம்வு உத்தியோகஸ்தர் திரு. ப. பரம்சோதி விளையாட்டுப் போதனாசிரியர் பி. பொன்னுச்சாமி ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்

### கரம்பன் வென்றது

வேலணை விளையாட்டுக் கழகங்களின் தெரிவுக்குழுவும் கரம்பன் விளையாட்டுக் கழக கோஷ்டிக்குமிடையே சினேகபூர்வமான கரப்பந்தாட்டப் போட்டியொன்று வேலணை பொதுவிளையாட்டு மைதானத்தில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. கரம்பன் கோஷ்டியினர் வேலணைக் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். இப்போட்டிக்கு விளையாட்டுப் போதனாசிரியர் பி. பொன்னுச்சாமி மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

### மின்சார மயமாகும்

கிராம மின்சார விஸ்தரிப்புத்திட்டத்தின்படி தீவுப் பகுதியில் ஊர்காவற்துறைக்கு நாரந்தனை கிராமசபைப் ப[illegible]க்குமே முதலில் மின்சாரவசதி கிடைக்கவிருக்கின்றன. இதற்கான துரித வேலைகள் நடைபெற்றுவருகின்றன. [illegible]

# எழுவைதீவு விளையாட்டுக் கழகம்

யாழ்ப்பாணம், சனி

எழுவைதீவு விளையாட்டுக் கழகம் என்னும் பெயருடன் கழகம் என்று அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்ற அதிகாரி திரு.வர்ணகுலசிங்கம்தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு.வி.சிவசம்பு(கி.ச.தலைவர் ,தலைவர் திரு ஐ அமரசிகாமணி,காரியாதரிசி: திரு வை உமாபதி, தனாதிகாரி: திரு எஸ். ஜெகநாதன். 4 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது விளையாட்டு அமைச்சைச் சேர்ந்த திரு.அழகரத்தினம், கிராமசேவையாள திரு கமலநாதன் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியில் ஐ. தே. கட்சி கிளை

பரந்தன், சனி

ஐக்கிய தேசியக்கட்சி கிளிநொச்சிக்கிளையின் புனரமைப்புக் கூட்டம் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மேலா இல்லத்தில் இருபாலையூர் திரு பொன் குமாரசாமிதலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர். எதிர்வரும் ஆட்சிமன்ற பொதுத்தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கிளிநொச்சி கிளை அபேட்சகரை தெரிவுசெய்யும் தீர்மானமும் மேற்படி கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

# 10 வருடங்களாக பயன் படுத்தப்படவில்லை

கோட்டை, சனி

1957-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால உண்டான அழிவுகளுக்கு நிவாரணமாகஅமெரிக்கா அளித்த நிதியுதவியில்ரூபா1,283930 இதுவரை அதாவது 10 வருடகாலமாகப் பயன்படுத்தப்படாது உள்ளதாக அரசாங்க கணக்காளர் குழு சமீபத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அ[illegible]கையில் குறிப்பிட்டுள்ளது.

10 வருடங்களாகச் செலவிடப்படாது வைத்திருந்த இந்த மீதிப்பணம் பற்றிய விபரங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்[illegible] இறைசேரி அதிபரைக் கேட் [illegible]

# பாடசாலைக் கட்டட வேலைகளுக் உள்ளூர் தொழிலாளர் நியமனம்

## கல்வி இலாகா அறிவிப்பு

பருத்தித்துறை,சனி

பாடசாலைக் கட்டடங்கள் சம்பந்தப்பட்டசகல வேலைகளும் ஒப்பந்தஅடிப்படையில் அவ்வப்பாடசாலைப் பெற்றூர் ஆகிரியசங்கத்திடமோ அன்றித் தனிப்பட்ட கொந்தராத்துக் காரரிடமோ கொடுக்கப்படும் போது கூடியவரையில் இலங்கையரே வேலைக்கமர்த்தப்படல் வேண்டுமென்றும், அதுவும் அவ்வப்பகுதி மக்களே தெரிவு செய்யப்படவேண்டுமென்றும் கல்விப்பகுதி அதிபர்களுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கை கூறுகிறது.

உள்ளூரில் தகுதி வாய்ந்த தொழிலாளர் இருந்தால் அவர்களை விடுத்து இந்தியரோ, அன்றி பிற ஊரவரோ வேலைக்கமர்த்தப்படும் வழக்கத்திற்கு முடிவு கட்டப்படல் வேண்டுமென்றும் இவ்விதிகள் உதாசீனம் செய்யப்படின் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டி நேரிடலாமென்றும் அச்சுற்று நிருபம் எச்சரிக்கிறது.

மல்லாகம் கி. ச.

# போட்டியின்றி தெரிவு

மல்லாகம், சனி

மல்லாகம் கிராம சபை 11-ம் வட்டார இடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கிராம சபை அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டது. திரு. முருகேசு மகாகந்தையா இவ்வட்டாரத்திற்குப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. கந்தையா அளவெட்டிப்பகுதியில்முன்னணி வகிக்கும் விவசாயியாவார்.

# வாகன முற்பணம்

பருத்தித்துறை, சனி

நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தாம் புதிதாக சைக்கிள் வாங்குவதற்கான முற்பணம் ரூபா 300 வழங்குமாறு கல்விப் பகுதியைக் கேட்டுள்ளனர். இம்முற்பணம் மாதவீதம் ஆசிரியரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுமென்றும், இக் கடன் பணத்திற்கு வட்டி நாலு வீதமென்றும் தெரிகிறது. பருத்தித்துறை, உடுப்பிட்டி கல்வியதிகாரிகள் பிரிவுகளிலிருந்து காசோலை மூலம் இம் முற்பணம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

## ஞாயிறு 14—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன்ட் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00செய்திச்சுருக்கம், 7-03 வயலின், 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்,

# புதிய ஜே. பி.

புத்தளம், சனி

கற்பிட்டி கிராமசபைத் தலைவர் ஜனாப். எஸ். எம். ஏ றசீது புத்தள மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிருஷ்ணன் முன்னிலையில் புதிய சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் பள்ளிவாசல்துறை கிராமமுன்னேற்றச்சங்கத்திலும், சனசமூகநிலையத்திலும் காரியதரிசியாகவும், உபகாரிய தரிசியாகவும் கடமையாற்றியுள்ளார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சிறந்த ஐ. ஆர். 8 விதை நெல்லு விற்பனைக்குண்டு புசல் ரூபா 20/- விசாரணை: தேருங்கண்டல் கம்ம்-துணுக்காய். அல்லது சோம மு. இராமனாதன், 223, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.　　　1399

# தொல்புரம் வெற்றி

சுழிபுரம், சனி

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக கோஷ்டிக்கும், கெனடி கழக கோஷ்டிக்கும் சினேகீத பூர்வமாக நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்தியசனசமூக நிலையத்தினர் வெற்றிபெற்றனர்.

முதல் இரு ஆட்டங்களிலும் தொல்புரம் மத்தியசன சமூக நிலையத்தினர் வெற்றி பெற்றனர். திரு.எஸ்.சிவராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்..

# சாஸ்திரமும் களவும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொண்டமானாறு செலவச்சந்நிதி கோவிலில் நடைபெற்ற களவுகள் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்களில் பலர் குறத்திகள் என்று தெரியவருகிறது.

கைரேகை சாஸ்திரம் பார்ப்பவர்கள் என்று கூறிக் கொள்ளும் இவர்கள் வீடுகளுக்குச் சென்று அங்குள்ள பிள்ளைகளின் நகைகளையும் களவாடி வருகிறூர்களாம்.

# திரு. ராகவனுக்கு உபசாரம

வெள்ளவத்தை, சனி

நுண்கலைச்செல்வர் திரு. அ. இராகவனுக்கு இம் மாதம் 17-ந் திகதி கொழும்பு 'தப்ரபேன்' ஹோட்டலில் தேநீர் விருந்தளிக்க திரு. இராகவன் வரவேற்புக் குழுவின் ஏற்பாடு செய்துள்ளனர்.

திரு. இராகவனின் தொல்பொருள் - நுண்கலை ஆராய்ச்சி முயற்சிகளைப் பாராட்டுமுகமாகவே இவ்வொழுங்கு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த

**எங்க ஊர் ராஜா**

அப்பல்லோ -11

12-9-69 தொடக்கம் அப்பல்லோ-11 டெக்னிக்கலரில் 15 நிமிடங்கள் காண்பிக்கப்படும். விண்வெளி வீரர்கள் பூமியிலிருந்து புறப்படுவதிலிருந்து சந்திரனில் கொடி நாட்டியதுவரை விபரமாகக் காண்பிக்கப்படும்.


Also Showing
APOLLO-11 in color-for 15 minutes,




கடைசி 2 தினங்கள்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா வெலிங்டன் (யாழ்நகர்) 2-30 6-30 -930

திரைகளில்





ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

பக்த **பிரகலாதா**

16-ந் திகதி முதல்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) ஆகிய திரைகளில்

டி. ஆர். ராமண்ணாவின் டைரக்ஷனில் உருவாகி

ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்

**நீயும் நானும்**


பட்டது கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கமும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

---

## குருநாகலையை யாழ் கோஷ்டி வென்றது

சங்கானை, சனி

குருநாகலில் நடைபெற்ற ''வெகியூசன்'' கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணம் பொலிசாரும் நுவரெலியா பொலிசாரும் மோதிக் கொண்டனர்.

யாழ்ப்பாணம் பொலிசார் 3-0 கோல்களைப் போட்டு வெற்றியீட்டினர் நுவரெலியா பொலிசார் பல கோல்கள் போட எடுத்த முயற்சிகள் யாழ்ப்பாண கோஷ்டி பின்னணி வீரர் திரு. சந்திரரத்தினவினால் முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சாரவசதி கிடைக்கவிருக்கின்றன. இதற்கான துரித வேலைகள் நடைபெற்றுவருகின்றன. வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு மத்திய அரசாங்க மூலம் மின்வசதிகள் கிடைப்பதற்கான வழிவகைகளை இரு கிராம சபையினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

---

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கத்தின் 4-வது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 25-ம் திகதி யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. பொ. தேவராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.


REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m
Lionel Jeffries - Martha Hyer
in
FIRST MEN IN THE MOON

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
வாழவைத்த தெய்வம்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poyadays 10-00 A.M.
Dean Martin Robert Mitchum
in
" 5 CARD STUD "
(Techni Color)

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
தேவ் ஆனந்த், மாலாசின்கா
நடித்த
மேரேலால்
(இந்தி)

**யாழ் - வின்ஸர்**

தினசரி — 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா,
நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி,
பண்டரிபாய், அசோகன்

நடிக்கும்

**புதியபூமி**


யில் குறிப்பிட்டுள்ளது.

10 வருடங்களாகச் செலவிடப்படாது வைத்திருந்த இந்த மீதிப்பணம் பற்றிய விபரங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு திறைசேரி அதிபரைக் கேட்டுள்ளது.

---

## பெண் ஜே.பி.க்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சமாதான நீதிபதியாக நியமனம் பெற்ற வடபகுதியில் முதலாவது பெண்மணியான திருமதி அந்தோனிப்பிள்ளை சுவாமிநாதனுக்கு யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரி மடப்பாடசாலை பெற்றோர் ஆசிரியர் பாராட்டு விழா ஒன்றை நடாத்தினர்.

சிரேஷ்ட தாயார் ஜோசெப்பின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிரேஷ்ட தாயார் பேசுகையில் இதேபாடசாலையில் கல்வி கற்ற திருமதி அந்தோனியாபிள்ளை அக்காலத்தில் மாணவிகளில் முன்னணி வகித்தார் என்றும் அதேபோலவே இப்போது ஆசிரியராக இங்கே கடமையாற்றுகையில் முன்னணி வகிக்கிறார் என்றும் பாராட்டினார்.

மாநகரசபையின் 1-வது பெண்மணியாகத் திகழும் திருமதி அந்தோனியாபிள்ளை வடபகுதியில் 1வது சமாதான நீதிபதியாக விளங்குவது பாராட்டத்தக்கது என்றும் கூறினார். (தே.நி)

---

## ஐ. நா வுக்கு இலங்கை தூதுகோஷ்டி


கோட்டை, சனி

இம்முறை ஐ. நா. வுக்கான இலங்கைத் தூதுக் கோஷ்டிக்கு ஐ. நா. வின் நிரந்தரப் பிரதிநிதியாகவிருக்கும் திரு. ஷேர்லி அமரசிங்காவே தலைமை வகிப்பார் செனேட்டர் எஃப். எஸ். சி. கல்பகே, வெளியுறவு டைரக்டர் வேர்ணர் மெண்டிஸ் கியவர்கள் தூதுக் கோஷ்டியின் இதர உறுப்பினர்களாக இருப்பார்கள் ஐ. நா வில் துணை நிரந்தரப் பிரதிநிதியாக விருக்கும் திரு. எல்மோ செனிவிரத்ன, வெளியுறவு இலாகா சட்ட ஆலோசகர் திரு. சி. டபிள்யூ. பின்டோ ஆகியவர்கள் தூதுக் கோஷ்டியின் மாற்று உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பிரிவுகளிலிருந்து காசோலை மூலம் இம் முற்பணம் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

சமூகநிலையத்திலும் காரியதரிசியாகவும், உபகாரியதரிசியாகவும் கடமையாற்றியுள்ளார்.

ஆச்சரியம் முயற்சிகளைப் பாராட்டுமுகமாகவே இவ்வொழுங்கு செய்யப்பட்டுள்ளது.


**ராணிக்கு ஒரு தோழி!**

உங்கள் மேனியின் கட்டிளமைக் கவர்ச்சியைக் காத்து வரும் ராணி சந்தன சோப்புக்குத் தோழியாக விளங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் பவுடர் ராணி சந்தன டல்கம் பவுடர்.

தூய சந்தனத்தின் குளுமையையும் பொன் வண்ணப் பொலிவையும் உங்கள் மேனிக்கு நாள் முழுதும் தருவன-

**ராணி** சந்தன சோப், சந்தன டல்கம் பவுடர்.

இவை இரண்டும்
சுவதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் தயாரிப்புகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36 மணிநேரத்தின்பின் வியட்னுமில் சண்டை

சைகோன், செப். 13

36 மணி நேரப் போர் ஓய்வின் பின் வியட்னுமில் மீண்டும் உக்கிரமான சண்டை நடைபெறத் தொடங்கியுள்ளது. அமெரிக்க பி. 52 விமானங்கள் வட வியட்னும்மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

அமெரிக்க ஜனுதிபதி திரு. நிக்ஸனின் அறிவித்தலைத் தொடர்ந்து தென் வியட்னுமிலுள்ள அமெரிக்க ராணுவத்தினர் மீண்டும் தாக்குதல்களைத் தொடர்ந்தனர்.

வட வியட்னும் பிரதமர் திரு. ஹோ—சி—மின்னின் மறைவையொட்டி மூன்று நாள் போர் ஓய்வு அமுல் நடத்தப்பட்டது.

வட வியட்னுமியரும் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

## யுதாண்ட் நம்பிக்கை

நியூயோர்க், செப் 13

இதேசமயத்தில், வியட்னுமில் விரைவில் அமைதி ஏற்படுமென்றும் இதற்கானஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## காமராஜர் நிலை பற்றி ராஜாஜி கருத்து

சென்னை, செப். 13

எரியும் கப்பலில் காமராஜர் தனித்து நிற்கிருர்என்று சுதந்திராக் கட்சித் தலைவர் ராஜாஜி கூறியிருக்கிருர்.

காந்தி நூற்ருண்டுவிழா இந்த ஆண்டு நடக்க இருப்பதைக் குறிப்பிட்டு ராஜாஜி எழுதியிருப்பதாவது:

### உடைந்த கப்பல்

எரிந்து கொண்டிருக்கிற காங்கிரஸ் கப்பலில் இருந்து 'சிண்டிகேட்'டில் உள்ள எல்லோருமே மீட்பு படகுகளில் ஏறித்தப்பிச்சென்று கொண்டிருப்பது போல்தெரிகிறது.

ஆனல் காமராஜர் மட்டும் எரிகின்ற அந்தக் கப்பலில் நின்று கொண்டிருக்கிருர்.

காந்தி நூற்ருண்டைக் குறிக்கும் வகையில் காங்கிரஸ் கப்பல் உடைந்துவிட்டதே.

மேலும் காந்தி நூற்ருண்டான இந்த ஆண்டில் பாகிஸ்தான்-சீன நாடுகளுக்கு இடையே உள்ள ஒத்துழைப்பு நமக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் நிலைக்கு வளர்ந்து இருக்கிறது.

அதேசமயம் நாட்டில் உற்பத்தியைப் பெருக்காமலேயே இங்கு உள்ள அரசாங்கம் உடனடியாகசோஷலிச அமைப்பை அடையப் போவதாகக் கூறுகிறது.

தன்னுடைய சொந்தக் கட்சித்தலைவர்களுக்குப்பணியாமல் தன்னிச்சையாகச் செல்லும் ஒரு பெண்ணின் பொறுப்பில் அரசாங்கம் இருக்கிறது.

### மதுவிலக்கு

மதுவிலக்கை அமுல்படுத்துவதில் ஏற்படும் தொந்தரவுகளில் இருந்துதாங்கள்தப்பித்துக் கொள்வதற்காகவும் கொஞ்சம் வருமானத்திற்காகவும் மாநில அரசாங்கங்களின் மூலம் டில்லியில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம் கள்ளுக்கடைகளையும் திறந்து வருகிறது.

மற்றவர்களின் பணத்தால் பத்து லட்சத்தில் ஒருவர் அதிர்ஷ்டவசமாக வெற்றி பெறும் லாட்டரிசீட்டு மோகம் நாடு முழுவதும் உள்ள மக்களிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

காந்தியுடன் சேர்ந்து செயற்பட்டவர்களுக்கு இப்பொழுது உருவாகியுள்ள நிலைமைகள் மிகவும் வேதனையை அளிக்கின்றன.

இவ்வாறு ராஜாஜி எழுதியிருக்கிருர்.

## 'அரசியலை மறந்து விடுங்கள்'

பாரத ஜனாதிபதி யோசனை

## சுப்பிரமணியத்துக்கு புதிய பதவி

புதுடில்லி, செப் 12

மத்திய அரசாங்கம் ஏற்படுத்த உத்தேசித்துள்ள விவசாயக் கமிஷனுக்குதமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் நியமிக்கப்படலாமெனத் தெரிய வருகிறது. பிரதமர் திருமதி இந்திரா இதற்கு ஆதரவளித்துள்ளதாகத் தெரிகிறது.

ரஷ்ய—சீனத்தலைவர்கள்

# சந்திப்பின் 24மணி நேரத்தின்பின் சச்சரவு தலைதூக்கியது

பீகிங், செப்டம்பர் 13

**சோவியத் பிரதமர் திரு. அலெக்சி கோஸிஜினும் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய்க்குமிடையே நடைபெற்ற சந்திப்புக்கு 24 மணிநேரத்தின்பின் சீன ரஷ்யா மீதான தனது கண்டனங்களைத் தொடர்ந்தது.**

ரஷ்யத் தலைவர்களை சீனப் பத்திரிகைகள் பிற்போக்குவாதிகளென்றும் திரிபுவாதிகளென்றும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் சகபாடிகள் என்றும் வர்ணித்தன.

இதற்கிடையே கோஸிஜினுக்கும் சூ-என்-லாய்க்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இருநாடுகளுக்குமிடையே தோன்றியுள்ள எல்லைப் பிரச்னைகள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியதாகவும் திரு. கோஸிஜின் எல்லைத் தகராறு விஷயத்தில் கண்டிப்பு காட்டியதாகவும் தெரிய வருகிறது.

பேச்சுவார்த்தைகளின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இருதரப்பினரும் மனம்விட்டுப்பேசியதாகவும் தத்தமது நிலைகளைத் தெளிவாக எடுத்துக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் இருதரப்பினரும் தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டதால் இவ்வித நிலை தோன்றியுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

சீன தாக்கினுல் ரஷ்யா திருப்பித்தாக்கும் எனச் சோவியத் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## இனி பால்மா இறக்குமதி யில்லை

கோட்டை, சனி

அடுத்த வருடம் முதல் பால்மா இறக்குமதிசெய்யப் படமாட்டாது. நாட்டுக்குத் தேவையான பால் பொருட்கள் யாவற்றையும் பால்சபை அடுத்த ஆண்டு முதல் பூர்த்திசெய்யும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இனி பால் உணவு இறக்குமதிக்காக அன்னிய செலாவணி ஒதுக்கப்படமாட்டாது என இறக்குமதிகட்டுப்பாட்டதிகாரி தெரிவித்துள்ளார்.

## சந்திர மண்டலத்திற்கு பால்விநியோகம்

பம்பாய், செப் 13

சந்திரமண்டலத்தில் குடியேறுகிறவர்களுக்கு பால் விநியோகம் செய்வதாக வடகுஜராத்திலுள்ள மேஸானு மாவட்ட பால் பண்ணைக்காரர் ஒருவர் அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அமெரிக்க ஜனுதிபதி திரு. நிக்ஸனுக்கு அவர் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் தெரிவித்துள்ளதா...

## பெருமாள் கோவில் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

[illegible]

## அக்டோபர் புரட்சி தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சீன கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாணக் கிளையினர் அக்டோபர் முதலாம் திகதி யாழ்ப்பாண நகரில் அக்டோபர் புரட்சி தினத்தைக் கொண்டாடவிருக்கின்றனர். (கா. நி)

## கைக்கடிகாரம் திருடினுர் 4 மாதம் சிறை

மட்டுவில், சனி

கைக்கடிகாரம்திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கொன்றில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் 4 மாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

ஒட்டிசுட்டான் முத்தையன் கட்டு விவசாயப் படைவீரரான அப்புக்குட்டி செல்லத்துரை (வயது 22) என்ற வாலிபர், கொடிகாமத்தைச் சேர்ந்த கனகரெத்தினம் என்பவரின் கைக்கடிகாரத்தைதிருடியதாகக் குற்றஞ்சாட்டி, கிளிநொச்சிப் பொலிசாரால் இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

செலவுக்குப் பணம் இல்லாமல் இருந்ததால் அந்தத் திருடியதாக எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் மாஜிஸ்திரேட் திரு. விக்னராசா 4 மாத சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## சங்காபிஷேகம்

சுழிபுரம், சனி

பண்ணுகம் விசவத்தனை ...மூர்த்தி கோவில் அஷ்...த்தர ஸஹஸ்ர சங்காபிஷேகம் வரும்திங்கட்கிழமை [illegible]

# இலங்கை தி. மு. க. வின் நான்காவது மாநில மாநாடு

## யாழ். நகரில் 17-ம் 18-ம் திகதிகளில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழகத்தின் நான்காவது ஆண்டு மாநில மாநாடு இம்மாதம் 17-ம் 18-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் 'அண்ணு நகரில்' நடைபெறவிருக்கின்றது.

17-ம் திகதி மாலை 2 மணியிலிருந்து யாழ். நகரமண்டபத்தில் புலவர் கந்த முருகேசனுர் அரங்கில் சமூக சீர்திருத்த மாநாடு நடைபெறும். திரு. எ. உ. நெடுமாறன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் அறிஞர் அண்ணுவுக்கு அஞ்சலியும், சொற்பொழிவுகளும் நடைபெறும்.

18-ம் திகதி இரண்டாம் நாள் காலை நகரமண்டபத்தில் பொதுக்குழுக்களின் மாநாடு நடைபெறும். சுமார் 200 கிளைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்வார்கள்.

அன்று மாலை 2 மணிக்கு குருநகர் றெக்ளமேசன் மைதானத்திலிருந்துஆரம்பமாகும் ஊர்வலம் மாலை கோட்டை மைதானம் 'திராவிடர் அரங்கை' சென்றடையும்.

கழகப் பொதுச்செயலாளர் திரு: ஏ: இளஞ்செழியன் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பலர் கருத்துரைகள் வழங்குவார்கள்.

இரண்டுநாளும் இசை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடைபெறும். (கா. நி)

## 'கடைசிவரை போராடியே தீருவோம்' — சிறிமா

அனுராதபுரம் சனி

'அடுத்த பொதுத்தேர்தலில் அரசாங்கக் கட்சியை வெற்றியீட்ட நாங்கள் விடமாட்டோம். அதற்காக கடைசிவரை போராடியே தீருவோம்.'

எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா அனுராதபுரத்தில் காந்தி சமிதியொன்றைத் திறந்துவைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களிலெல்லாம் எமது கட்சி வெற்றியீட்டியுள்ளதை மக்கள் அறிவர். மக்கள் அரசாங்கத்தின் பொய்ப்பிரசாரங்களை நம்பி மோசமடையக்கூடாது. மக்களை எதிர்நோக்கியுள்ள வகழ்க்கைத்தரப் பிரச்னையை நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்துவைப்போம்.

## 6 களவுகளுக்காகக் கைதானவர் 8 தடவை சிறை சென்றவராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தினசரி இரவு நேரத்தில் வீடுடைத்துக் களவுகள் நடத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் தாமோதரம் பலத்த தேடுதலின் பின்னர் கைது செய்தாராம்.

ஆறு களவுகள் சம்பந்தமாகப் பொலிஸரால் நீண்ட நாட்களாகத் தேடப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்ட இவர் ஏற்கனவே 8 தடவைகள் சிறை சென்றவர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளதாம்.

சந்தேக நபர் களவாடியதாகக் கூறப்படும் தையல் மெஷின், சேலைகள் போன்றவைகள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் பகுதியினர் தெரிவித்தனா.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான சின்னத்துரை வேலாயுதம் என்பவர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் இம்மாதம் 21-ம் திகதி வரை றிமாண்டில்வைக்கப்பட்டுள்ளார். (கா. நி)

## சைக்கிளைத் திருடினுர் 3 வருட சிறை

மட்டுவில், சனி

## 3 வருட நன்னடத்தை

மல்லாகம், சனி

மாடு திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்ட இணுவிலைச் சேர்ந்த வல்லிபுரம் நடராசா என்பவரைமல்லாகம் நீதிபதி திரு.எஸ். ஆனந்தகுமாரசுவாமி மூன்று வருடகால நன்னடத்தைப்...

## குப்பிளான் கொலைவழக்கு ஒத்திவைப்பு

மல்லாகம், சனி

குப்பிளானைச் சேர்ந்த இளையதம்பி ஆறுமுகம் என்பவர் கல்லினுல் தாக்கப்பட்டு மரணமானது சம்பந்தமாக அதேயிடத்தைச் சேர்ந்த எஸ். அருணுசலம் என்ற வாலிபர்மீது கொலைக்குற்றம் சுமத்தி சுன்ணுகம் பொலிசார் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்

வழக்கு விசாரணையின் போது இறந்தவரின்தாயார் இளையதம்பி தங்கமுத்து வயது (70) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் இரவு மகன் ஆறுமுகத்துக்கும் பேரப்பிள்ளைக்கும் உணவு வழங்கிக் கொண்டிருக்கையில் எதிரி எமது வீட்டுக்கு வந்து பருகுவதற்குத் தண்ணீர் தருமாறு கேட்டார். இந்நேரம் வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. காலஞ்சென்றவர் தண்ணீர் இல்லை எனத் தெரிவித்து எதிரியை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு கூறினுர். எதிரி தனது தாயைத் தேடுவதாகக் கூறி அறைக்குள் நுழைந்தார். அறைக்குள் செல்லுகையில் என்னை எதிரி நிலத்தில் தள்ளி வீழ்த்தினுர். பின்னர் என் பேரன் தனது தகப்பனுன காலஞ்சென்றவர் கல்லினுல் எதிரியால் தாக்கப்பட்டு விழுந்து கிடப்பதாகக்குளறினுர். காலஞ்சென்றவரை பரமநாதன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ருர்.

காலஞ் சென்றவரைப் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியைப் பெருக்காமலேயே இங்கு உள்ள அரசாங்கம் உடனடியாகசேஷா

ளையை அளிக்கின்றன.

இவ்வாறு ராஜாஜி எழுதி இருக்கிறார்.

# ‘அரசியலை மறந்து விடுங்கள்’

## பாரத ஜனாதிபதி யோசனை


சென்னை செப். 13

‘அரசியலை மறந்துவிட்டு முன்னிருக்கும் சேவையை மனதில் கொண்டுமுழுமையாக நிறைவேற்றுங்கள்.’

இவ்வாறு பாரத ஜனாதிபதி திரு வி. வி.கிரி சென்னை நகரசபை தமக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

நகரசபை திரு. கிரிக்கு சிறந்தவரவேற்பளித்தது.

திரு. கிரி தொடர்ந்து பேசுகையில், நகரின் சுத்தம், சுகாதாரம் சிறப்பு ஆகியவற்றுக்காகச்சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென வேண்டுகோள்விடுத்தார்.



பாரத ஜனாதிபதியும் மனைவியும்

# தமிழகத்தில் மீண்டும் மாணவர் கடேற்படை

சென்னை செப். 13

தமிழ்நாட்டில் மீண்டும் தேசியமாணவர் கடேற்படை (என். ஸி: ஸி. பயிற்ச்சி) ஆரம்பிப்பது சம்பந்தமாக தமிழக அரசாங்கம் தெரிவித்துள்ள சமரசத் திட்டத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது

இந்தச் சமரசத் திட்டப்படி தமிழ்நாட்டில் என். சி. சி. அணிவகுப்புக்கான ஆணைச் சொற்கள் ஆங்கிலத்திலேயே இருக்கும் ஆனால் தமிழ்நாட்டு மாணவர்கள் வெளியே சென்றால் உபயோகமாயிருக்கும் பொருட்டு அவர்களுக்கு வகுப்பு அறைகளில் ஹிந்தி ஆணைச் சொற்களும் போதிக்கப்படும்.

மத்திய அரசாங்க பாதுகாப்பு இலாகா உதவிஅமைச்சர் திரு. எம். ஆர். கிருஷ்ண தமிழக முதலமைச்சரையும் கல்வி அமைச்சரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே இவ்வித உடன்பாடு ஏற்பட்டது

## சீனஅணு ஆயுதம்பற்றி பிரிட்டன் கருத்து

லண்டன், செப். 13

சீனாவின் அணு ஆயுதத் திட்டம் மிகவும் பின்னடைந்த நிலையிலிருப்பதாக லண்டனிலுள்ள ராணுவ ஆராய்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

சீனாவின் ராணுவபலம் இன்னமும் அதனுடைய ஏராளமான ஆள்பலத்தை யொட்டியே இருந்து வருவதாகவும் மேற்படி கழகம் தெரிவித்துள்ளது.

## விமான விபத்தில் 45 பேர் பலி

மணிலா, செப். 13

பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் நடைபெற்ற விமான விபத்தில், விமானத்தில் சென்ற 47 பிரயாணிகளில் இருவர் மட்டுமே உயிர் தப்பினர்.

மேஸானு மாவட்ட பால் பண்ணைக்காரர் ஒருவர் அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி திரு. நிக்ஸனுக்கு அவர் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

சந்திரமண்டலத்தில் நீங்கள் முதன் முதலாக உங்கள் ஆட்களை இறக்கியிருப்பதால் அங்கு வசிப்பதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுப்பீர்களென்று நம்புகின்றோம். மனிதன் எங்கிருந்தாலும் அவனுக்கு பால் இன்றியமையாதது எனவே சந்திரமண்டலத்தில் மனிதர்கள் குடியேறி வாழத் தொடங்கியதும் அங்கு எங்கள் நிறுவனம் ஒருபால்பண்ணை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறது இதிலுள்ள அபாயங்களை நாங்கள் பொருட்படுத்தவில்லை.

எங்களை உங்களது பட்டியலில் வைத்துக் கொண்டு புதிய சந்திர மண்டல குடியேற்றக் காரர்களுக்கு சேவை செய்ய ஒரு வாய்ப்பைத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்,

## நடிகர் கிஷோர் குமார் பிணையில் விடுதலை

புதுடில்லி, செப். 13

வரி கொடாது ஏமாற்றிய வழக்கில் இருமாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த பிரபல ஹிந்தி நடிகர் கிஷோர் குமார் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

1961-62-ம் வருடத்தில் ரூபா 1,60,000 வரி கொடாது ஏமாற்றியதாக இவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## பஸ் - லொறி மோதல்

பருத்தித்துறை, சனி

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு இ. போ. ச. பஸ் எதிரே வந்தலொறியுடன் மோதியதால் பலத்த சேதத்துக்குள்ளானது. பிரயாணிகள் மிகச் சொற்ப காயங்களுடன் தப்பித்துக்கொண்டனர். பருத்தித்துறைப் பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணை நடாத்தினர். நெல்லியடி மார்க்கட்டுக்கு அருகாமையில் இவ்விபத்து நடந்தது.

## கோவில் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இம்மாதம் 21-ம் திகதி ரதோற்சவமும், 22-ம் திகதி தீர்த்தோற்சவமும், 23-ம் திகதி திருக்கல்யாணமும், 24-ம் திகதி திருவூஞ்சல் பூந்தொட்டித் திருவிழாவும் நடைபெறும்.

## எதிரி விடுதலை

மல்லாகம், சனி

நெக்கிலெஸ் நம்பிக்கை மோசடி செய்ததாக தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணையின் பின் எதிரி விடுதலையானார்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் வீ. கந்தசாமி என்பவரிடமிருந்து தங்க நெக்கிலெஸ் நகை ஆபரணம் நம்பிக்கை மோசடி செய்ததாக கே. கிருஷ்ணசாமி மீது இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் சிவ. சிறீதரன் ஆஜரானார்.

## சங்காபிஷேகம்

சுழிபுரம், சனி

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் அஷ்டோத்தர ஸஹஸ்ர சங்காபிஷேகம் வரும்திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்றது

14ம் திகதி மாலை 7மணி தொடக்கம் யாகபூசை அக்கினி காரியம், சிவசங்கற்ப்பசூக்த்த ஹோமம் விசேஷ பூசை ஆகியன நடைபெற்று திங்கள் சங்காபிஷேகம், அலங்காரப் பூசை, திருவுலாக் காட்சி ஆகியன நடைபெறும்.

## விறகு தட்டுப்பாடு

சித்தன்கேணி, சனி

வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் விறகு பெறுவதில் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். கடந்த இரண்டு மாத காலமாக வட்டுக்கோட்டை அரசினர் மரக்கூட்டுத்தாபன விறகாலையில் விறகு கிடைப்பது அரிதாயிருக்கிறது. இங்கு கட்டிடத் தேவைகளுக்கான மரங்களே கிடைக்கின்றன. இதனால் விறகுகளைத் தனியார் விறகாலைகளில் அதிக விலைகொடுத்து, பெறவேண்டியேற்பட்டுள்ளது. இது விஷயத்தில் உடனடியாகக் கவனித்து ஆவனசெய்யும்படி இப்பகுதி மக்கள் மரக்கூட்டுத்தாபனத் தலைவரை, தந்தி மூலம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சைக்கிளைத் திருடினர் 3 வருட சிறை

மட்டுவில், சனி

சைக்கிளைத் திருடினர் என்ற வழக்கில் வாலிபர் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவருக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் மூன்று வருடச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தையா அப்புத்துரை (வயது 18) என்ற வாலிபர் அதே ஊரைச் சேர்ந்த தாவளை இயத்தாலை வாசியான எஸ். நடராஜா என்பவருக்குச் சொந்தமான ஒரு சைக்கிளைத் திருடி விற்றதாக, சாவகச்சேரிப் பொலிசாரல் தொடரப்பட்ட இவ் வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

விசாரணையின் போது சைக்கில் திருடிய குற்றத்தை வாலிபர் அப்புத்துரை ஏற்றுக் கொண்டதால் மாஜிஸ்திரேட் 3 வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# ‘பதவியைத் துஷ்பிரயோகம் செய்யும் எம்.பியை தட்டிக்கேளுங்கள்’

### சாவகச்சேரி எம்.பி.

மட்டுவில், சனி

‘ஆட்சிமன்ற உறுப்பினர் பதவியால் கிடைக்கும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு, எந்த ஓர் ஆட்சிமன்ற உறுப்பினருக்கும் அதிகாரம் கிடையாது. அப்படி ஒருவர் துஷ்பிரயோகம் செய்யும் பட்சத்தில் அதைத் தட்டிக்கேட்கும் அதிகாரம் ஒவ்வோர் பொதுமகனுக்கும் உண்டு.

இவ்வாறு மட்டுவில் விளைவேலிப் பகுதி தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வ. நவரத்தினம் கூறினார்.

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு சண்முகம் ஆசைப்பிள்ளை தலைமைதாங்கினார். திரு நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

‘பொதுமக்களாகிய நீங்கள் ஆட்சிமன்றத்துக்கு ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்து அனுப்புவது எமது இனத்தினதும், மொழியினதும், நாட்டினதும் நன்மைக்காக உழைப்பதற்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் தான்.

இந்த உண்மையை உணராது எந்தவொரு ஆட்சிமன்ற உறுப்பினரும், தான் தோன்றித்தனமாகத் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும்பட்சத்தில் அவருக்குச் சரியான தண்டனை கொடுக்கவேண்டியது பொதுமக்களாகிய எஜமானர்களின் கடமையாகும்.

கடந்த தேர்தல் முடிவடைந்ததும் எம்மை இரு கட்சிகள் தம்முடன் சேரும்படி கேட்டன. அதில் ஒன்று ஐக்கிய தேசியக்கட்சி மற்றது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. அப்பொழுது எமது கட்சி அக்கட்சிகளுடன் 4 அம்சத்திட்டங்களைப் பற்றி ஆராய்ந்தது. அப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சி ஒன்று தான் எமது கோரிக்கைகளான பிரதேச சுயாட்சி, மலைநாட்டுத்தமிழர் பிரச்னை மொழி உரிமை போன்ற அம்சங்களுக்கு ஒத்துவந்தது ஒப்பந்தமும் செய்து கொண்டோம்.

தியாகத்தின் அடிப்படையிலேதான் நாம் எமது உரிமைகளைப் பெறமுடியும். இத்தகைய அரசியல் விஷயங்களிலே வாலிபர்கள் எமக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். எனவேதான் நாம் ஆங்காங்கே வாலிப முன்னணிக் கிளைகளை நிறுவிவருகிறோம். வாலிப முன்னணிகள் இவ் விஷயத்தில் நீண்டசேவை செய்யத் தயாராக இருக்க வேண்டும்’ என்றும் கேட்டுக்கொண்டார்

முன்னாள் கிராமசபை உறுப்பினர் திரு. சின்னப்பு குமாரவேலு, முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு. எஸ் சுப்பிரமணியம், கே. சண்முகநாதன் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர். செல்வன் எம். ஏ. வேலழகன் நன்றியுரை கூறினர்

மாடு திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்ட இணுவிலைச் சேர்ந்த வல்லிபுரம் நடராசா என்பவரைமல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசுவாமி மூன்று வருடகால நன்னடத்தைப் பாதுகாவலில் செல்ல உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். இவ்வழக்கு சுன்னாகம்பொலிஸாரால் தொடரப்பட்டிருந்தது எதிரி சார்பில் வழக்கறிஞர் சிவசிறீதரன் ஆஜராகியிருந்தார்.

பணம் மோசடி

## வயோதிபர் தற்கொலை

மட்டுவில், சனி

தாம் சேகரித்து வைத்திருந்த பொருட்களையும், பணத்தையும் சிலர் மோசடி செய்துவிட்டதால், மனமுடைந்து காணப்பட்டவயோதிபர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

மட்டுவில் வடக்கு சரவணமுத்து சண்முகம் (வயது 60) என்பவரது மரணவிசாரணையில் இத் தகவல் தெரியவந்தது. சாவகச்சேரி பொலிசார் ஸ்தலத்திற்கு சென்று விசாரணைசெய்தனர். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கதிர்காமசேகரர் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

...

## இசை விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

நீர்கொழும்பு பிள்ளையார் கோவில் ரதோற்சவத்தை முன்னிட்டு நீர்கொழும்பு வர்த்தக சிப்பந்திகள் இம்மாதம் 15-ம் திகதி இசை விழாவொன்றை நீர்கொழும்பில் நடத்தவிருக்கிறார்கள். (கா. நி)

காலஞ்சென்றவர் கல்லினால் எதிரியால் தாக்கப்பட்டு விழுந்து கிடப்பதாகக்குளறினார். காலஞ்சென்றவரை பரமநாதன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்.

காலஞ் சென்றவரைப் பிரேத பரிசோதனை நடத்திய சட்டவைத்திய அதிகாரி டாக்டர் பாலசிங்கமும் சாட்சியமளித்தார்.

எதிரியை றிமாண்டில் தொடர்ந்து வைக்க உத்தரவிட்ட நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 20ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## வடமேல் மாகாண விவசாயப் போட்டி

புத்தளம், சனி

வடமேல் மாகாண விவசாயப்போட்டிகளுக்கா நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புத்தளம் சஹிரா மகாவித்தியாலயம், சாந்த மரியாள் வித்தியாலயம், முந்தல் வித்தியாலயம், சிலாபம் முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவை இப்போட்டியில் கலந்துகொள்ளும். இம்மாதம் 28-ந் திகதி பாத்திமா மகளிர் வித்தியாலயத்தில் போட்டி நடைபெறும்.

## மரம் நாட்டு விழா


மல்லாகம், சனி

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், கிராம முன்னேற்றுச் சங்கப் பிரதிநிதிகள், கிராம சேவையாளர் ஆகியோருடன் வலி. வடக்குக் காரியாதிகாரி, திரு: பீ. எல். பற்றிக் தமது பகுதியில் கொண்டாடப்படவிருக்கும் மரம் நாட்டு விழா ஏற்பாடுகள் பற்றி கலந்துரையாடல் நடாத்தினார்.

## வெளி நாடு செல்கிறார்

சித்தன்கேணி, சனி

கம்யூனிஸ்ட் கட்சி வாலிப முன்னணியின் வடபகுதி அமைப்பாளர் திரு. சி. விஜயானந்தன் வருகிற 16ந் திகதி விமான மூலம் ரஷ்யா பயணமாகின்றார் இவர் ரஷ்யாவில் ஒரு மாதகாலமும் பின்னர் கிழக்கு ஜெர்மனியில் ஒரு வருடகாலமும் தங்கியிருந்து அந்த நாடுகளில் உயர் கல்விபெறுவார். திரு. விஜயானந்தன் இரு நாட்டு அரசாங்கங்களின் அழைப்பை ஏற்று அங்கு செல்கின்றார்.



இவர் கந்தரோடை திரு. மு. சின்னத்தம்பியின் புத்திரனும். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் பழைய மாணவருமாவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

'இந்து சமயத்திலுள்ள தீண்டாமை என்னும் களங்கத்தை முற்றிலும் அகறறவேண்டும். நம்மைச் சுற்றி சூரியனைப் போல் ஒளி வீசிக்கொண்டிருக்கும் சத்தியத்தைக் கோடிக் கணக்கான சாதி இந்துக்கள் காணவேண்டும்.'

— மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 29-ந் திகதி (14-9-69)

## யார் பெரியவர்?

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போல், இந்திய தேசிய காங்கிரஸில் சமரசத் தீர்மானம் நிறைவேறிய பின்பும், தலைவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவதாகத் தெரியவில்லை. இதற்குப் பதில் பல தலைவர்களும் ஒருவரை ஒருவர் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தாக்கிப் பேசிப் பிரசாரம் செய்து வருகிறார்கள். திரு. சஞ்சீவிரெட்டியின் தோல்வியையும், மொரார்ஜி நிதிமந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதையும் 'ஸிண்டிகேட்' எனப்படும் கோஷ்டியினர் மறக்கவோ மன்னிக்கவோ இல்லை.

தமிழகத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும், மொரார்ஜி காமராஜ், திருமதி கிருபாளினி முதலியவர்கள் பிரதமர் இந்திராவுக்கு மாறுகச் செய்யும் பிரசாரங்கள் இதை நிரூபிக்கின்றன. காங்கிரஸ் தலைவரான நிஜலிங்கப்பா தமது பதவியிலிருந்து விலக வேண்டுமென்றும் வேறு சிலர் கேட்கின்றனர். இதிலிருந்து ஒற்றுமைக்குப் பதில் இருசாராருக்கும் வேற்றுமை உள்ளூர வளர்ந்து வருகிறதென்பது தெரிகின்றது. நாட்டுக்கு இது எவ்வளவு தீங்கு என்பதை விளக்கத் தேவையில்லை.

தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் பெரியவரா அல்லது பார்லிமெண்ட் கட்சித் தலைவரான பிரதமர் பெரியவரா என்ற விஷயத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. இருவருக்கிடையிலும் நெருங்கிய ஒத்துழைப்பும் நல்லுறவும் இருப்பின் இந்தக் கேள்வி எழ வேண்டிய காரணமே இராது. ஆனால் துரதிருஷ்டவசமாக காங்கிரஸ் தலைவரான நிஜலிங்கப்பாவுக்கும், பிரதமர் இந்திராவுக்கும் ஒத்துழைப்பு இல்லாது போனதால்தான் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. சமரசத் தீர்மானம்

ரஸ் மகாசபைத் தலைவர் தான் சந்தேகத்துக்கு இடமின்றிப் பெரியவர். சுதந்திரம் பெற்ற பின், பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேருவே காங்கிரஸ் தலைவராக இருந்தமையால், கட்சிக்கும், பிரதமருக்கும் சச்சரவு இல்லாமலும் யார், பெரியவரென்ற கேள்விக்கு இடமில்லாமலும் போயிற்று. மேலும் அவருக்கு விடுதலை வீரர் என்ற முறையில் பெரும் செல்வாக்கு இருந்தமையால், அவரை எதிர்க்க காங்கிரஸில் யாரும் துணியவில்லை. அவர் மறைவுக்குப் பின்னர்தான் இந்தப்பிரச்னை பெரிதும் கிளம்பியுள்ளது.

நாடு சுதந்திரமடைந்த பின் காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று காந்தி அடிகள் கூறினார்கள். ஏனெனில் அந்த ஸ்தாபனத்தின் நோக்கம், சுதந்திரம் பெற்றதும் முடிந்துவிட்டது என்பதால் தான். ஆனால் அது கலைக்கப்படவில்லை. இன்று காங்கிரஸ் சபைத் தலைவருக்கு நாட்டிலே எவ்வித பொறுப்புமில்லை. பொறுப்பெல்லாம் பிரதமருக்குத்தான். 55 கோடி மக்களடங்கிய பெரியதோர் நாட்டின் நிர்வாகத்தை நடத்த வேண்டியிருக்கும் பிரதம மந்திரி, காங்கிரஸ் தலைவருக்கு உட்பட்டு, அவருக்கு அடங்கி நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது சரியாகாது. பிரதமர் இந்திரா கூறியது போல், பிரதமரின் கருத்துக்கு விசேஷ முக்கியத்துவம் இருக்க வேண்டும். தவறு செய்யவும்கூட அவருக்கு உரிமை இருந்தாலே அந்தப் பெரும் பொறுப்பை அவர் ஏற்று நடத்திவர முடியும். இதற்குக் காங்கிரஸ் தலைவரோ அல்லது அவரைச் சேர்ந்த 'ஸிண்டிகேட்' கோஷ்டியினரோ தயாரா? இதற்குத் தயாராக இல்லாவிடில் நிஜலிங்கப்பா உள்ளிட்டு, 'ஸிண்டிகேட்'டைச்

# "போலியோ" வைத் தடுக்க ஒன்பது ஆலோசனைகள்

நாட்டின் பல பாகங்களிலும் அதிவேகமாகப் பரவி வரும் 'போலியோ' என அழைக்கப்படும் இளம்பிள்ளைவாத நோயைத் தடுப்பதற்கான முயற்சிகள் இப்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதற்கென தடுப்புமருந்து கொடுக்கும் பொதுஜன இயக்கம் கொழும்பில் ஆரம்பமாயுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலும் மற்றும் ஏனைய பகுதிகளிலும் இம்மாதம் 19-ம் திகதி ஆரம்பமாகின்றது.

கொழும்பில் இம்மாதம் 4-ம் திகதியிலிருந்து 27-ம் திகதிவரை முதல் தடவை மருந்து வழங்கப்பட்டுவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் முதல் தடவை மருந்து இம்மாதம் 19-ம் திகதியிலிருந்து அக்டோபர் 2-ம் திகதிவரையும், இரண்டாம் தடவை மருந்து நவம்பர் மாதம் 2-ம் திகதியிலிருந்து 15-ம் திகதி வரையும் வழங்கப்படவிருக்கின்றது.

இத் தடுப்பு மருந்தின் அவசியம் பற்றி ஒன்பது ஆலோசனைகளை அரசாங்கப் பகுதியினர் பொதுமக்களுக்கு விடுத்துள்ளனர்.

அவை பின்வருமாறு:

### பொதுஜன இயக்கம் எதற்கு?

கடந்த 5 வருடங்களாக இந்நாடெங்கும் வழமையாக மேற்கொள்ளப்பட்ட தடுப்பு மருந்து கொடுக்கும் பல இயக்கங்கள் திருப்திகரமாக இருக்கவில்லை. பொதுஜன இயக்கங்கள் சிறந்த பயனளித்துள்ளன. பொதுஜன இயக்கங்களின்போது மருந்துகள் சிறந்த முறையில் சேகரித்து வைத்து விநியோகிக்கப் படுகின்றன. ஆகவே, மருந்தின் சக்தி நன்கு பாதுகாக்கப்படுவதுடன் வீண் விரயமும் வெகுவாகக் குறைக்கப்படுகிறது

மேலும், சகல பிள்ளைகளுக்கும் இந்த மருந்து ஏககாலத்தில் கொடுக்கப்படும்போது கூட்டுப் பயனும் அதிகரிப்பதாகக் காணப்படுகிறது.

### இரண்டு காரணங்கள்

இனிமேல் நாடு முழுவதிலும் வருடமொருமுறை இந்தப் பொதுஜன இயக்கம் மேற்கொள்ளப்படும். இருநேர மருந்தைக் கொடுப்பதன் மூலம் இதுவரையில் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளத் தவறிய எல்லாப் பிள்ளைகளுக்கும் இதனைக் கொடுத்தலே இதன் அடிப்படை நோக்கம். 5 வயதுக்குட்பட்ட ஏனைய பிள்ளைகள் யாவருக்கும் இந்நோயை எதிர்க்கும் சக்தியை அதிகமாக்கும் ஒருநேர மருந்து கொடுக்கப்படும். இது அவர்களது பாதுகாப்புத்தரத்தை உயர்ந்த நிலையில் வைக்க உதவும்.

### யாருக்குத் தடுப்பு மருந்து?

ஐந்து வயதுக்கு உட்பட்ட எல்லாப் பிள்ளைகளும் அவர்கள் ஏற்கெனவே பூரணமான தடுப்புச் சக்தியைப் பெற்றிருந்தாலுங்கூட, இந்த இயக்கத்தின்போது இன்னொரு தடவை எதிர்ப்புச் சக்தியை அதிகமாக்கும் மருந்தைக்குடிக்கவேண்டும்.

ஆம். ஆனால் அது எதிர்பார்க்கும் பலனை அளிக்கத் தவறலாம் என்ற காரணத்தினால், காய்ச்சல் அல்லது வயிற்றுளைவு உள்ள பிள்ளைகளுக்கு அதனைக்கொடுத்தலைத்தவிர்க்கலாம் தடிமன் உள்ள பிள்ளைகளுக்கு இம்மருந்து கொடுக்கப்படலாம்.

சிசுக்களுக்கு அவைபிறந்தவுடனேயே இம்மருந்தைக் கொடுக்கலாம். இது தீங்கற்றது. ஆனால் எதிர்பார்க்கும் நல்ல பயனைப் பெறுவதற்கு மேலும் அதிக அளவுமருந்து கொடுக்கப்பட வேண்டும். இரண்டு மாதங்கள் கழிந்த பின்னர் இம்மருந்தைக் கொடுப்பதால் மேலும் அதிக பலன் கிட்டும்.

ஒரு வயதுக்கு முன்னால் மூன்றுதடவைகள் மருந்து கொடுத்துத் தடுப்புச் சக்தியை ஏற்படுத்துவதே எப்பொழுதும் விரும்பத்தக்கது. ஆனால் முதலாவது பிறந்த நாளை அடையுமுன்னர் இரண்டு தடவைகள் கொடுத்துவிடவேண்டும்.

### வேறேதாவது நோய்களை ஏற்படுத்துகிறதா?

இந்த மருந்து எவ்வித தீங்குமற்றது. இதனால் எதிர்த்தாக்கங்களோ, பக்கநோய்களோ ஏற்படுவதில்லை.

இம்மருந்தை துளிகளாக வாயினுள் விட்டபின் தண்ணீரைக் குடிக்கக் கொடுக்கலாம் அல்லது சொற்ப சீனியுடன் அல்லது சீனிப்பாகுடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

இம்மருந்தைக் கொடுத்தபின் உணவைப்பற்றி எந்த விதமான கட்டுப்பாடுகளும் இல்லை.

——

## பிரிவுபசாரம்

அராலி, சனி

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அதிபர் திரு. த. இராசையா சேவையினின்றும் ஓய்வு பெறுவதை முன்னிட்டு வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் அன்னாருக்கு ஒரு பிரிவுபசாரமளித்தனர். இவ் வித்தியாலத்தில் அவர் கடமையாற்றிய ஓராண்டு காலத்தில் வித்தியாலயத்திற்கு அவர் ஆற்றிய தொண்டுகள் பற்றிப் பலர் புகழ்ந்து பேசினர்.

# அண்ணா பிறந்த நாள் விழா ஒரு மாத காலம் நீடிக்கும்

## தமிழ் நாட்டில் சிறப்பான ஏற்பாடுகள்

சென்னை, செப். 13

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணாதுரையின் பிறந்தநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்பாடுகள் செய்து வருகின்றது. இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாட்டங்கள் நடக்கும்.

கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

15-ம் திகதி சென்னை நகரில் உள்ள எல்லா வட்டங்களிலும் கொடி ஏற்றுதல், சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குதல், ஏழைகளுக்கு [illegible]ப்பாடுபோடுதல் போன்ற நிகழ்ச்சிகள் அன்று நடைபெறும்.

அன்றுமாலை தி. மு. க. [illegible] [illegible] கூட்டம் நடக்கிறது. அதில்

திகதி மாலை 6 மணிக்கு நடக்கிறது. முதல் அமைச்சர் கருணாநிதி அரங்கத்தை திறந்து வைக்கிறார். விழாவுக்கு அமைச்சர் முத்துசாமி தலைமை வக்கிறார்.

அதற்கு முன்னதா[illegible] சீரணி தொண்டர்கள் 3 [illegible]ணிக்கு அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைக்கிறார்கள். பின்பு அங்கிருந்து [illegible] மவுண்டு [illegible]ட்டில் உள்ளசீர[illegible] அலுவலகத்துக்கு வரு[illegible]ர்கள்.

## சித்திபெற்றவர்கள்

கோட்டை, சனி

இலங்கைப் பல்கலைக்கழக முதல்வருடப் பொறியியல் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ்மாணவர்களின் பெயர்கள்:

எஸ் பாலகிருஷ்ணன், ரி பாலேந்திர, கே சந்திரகுமார், டி எம் ஜெ தேவாசீர்வாதம், என் தேவராஜா, என் இந்திரசேனன், கே ஜெயபாலன், எஸ் ஜெயசிறி, ஆர் கமலநாதன், கே கணேசலிங்கம், செல்வி ஜெ கதிரவேலு, எல் மகேந்திரன், எஸ் மகேந்திரா, என் மனோகரன், சி எஸ் மரியநாயகம், ஏ எச் ஏ மௌயுத், எஸ் எச் எம் மௌயூத், என் நடராஜா, சி ஆர் நாகராஜா, என் நல்லையா, எம் நிமலேந்திரன், ஆர் நித்தியானந்தன் எஸ் பழமுதுசிங், சிங்கம், ஜி கே போல்,

# ஐயாறன் எழுதுவது

பக்கத்திலே ஒரு வீட்டில் ஏதோ சடங்கு. இரண்டு நாட்களாக ஒலிபெருக்கி காலை முதல் இரவு வெகு நேரம்வரை, கேட்டுக்கேட்டுப்புளித்துப்போன டப்பாப் பாட்டுகளைபோட்டுகாதைத் துளைத்து பிரணனைவாங்கியது. வீட்டில் இருக்கவே சகிக்க வில்லை.

பொலிசார் ஒலிபெருக்கிக்கு இப்படி நாட்[illegible]ணக்காக 'லைசென்ஸ்' கொடுப்பதைப் பற்றி, பொதுமக்களின் நன்மையை உத்தேசித்துப் புனராலோசனை செய்யவேண்டும். மிக அவசியமாயின் இரண்டொரு மணிநேரத்துக்கு அனுமதிக்கட்டும். அதுவும் வீட்டுக்குள்ளே சங்கீதம் கேட்கும் படியாக இருக்கலாம். தெருவெல்லாம் கேட்கும்படி ஒலிபெருக்குவது, மற்றவர்களைப் பெரிதும் இம்சிப்பதாகும்.

அது மட்டுமல்ல டப்பா சங்கீத ஒலிபெருக்கியால், நாதசுரக்காரர்களுக்குப் பிழைப்புப் பெரிதும் குறைந்துவிட்டதாம். ஒரு வீட்டில் மேளமடித்து நாதசுரம் வாசித்தால் எவ்வளவு மங்களகரமாக இருக்கும்.! தமிழருக்கே உரிய இந்த நாதசுரக் கலையைவளர்க்கப் பொதுமக்களும் அரசாங்கமும் கூடுமானதையெல்லாம் செய்யவேண்டும். அதை விட்டு டப்பாப் பாட்டுக்களை ஒலிபெருக்குவது, நாதசுரக் கலையைக் கொல்லுவதற்கே ஒப்பாகும்.

அகவே தமிழ்ப் பொதுமக்களும் கூடுமானவரை டப்பா சங்கீத ஒலிபெருக்கியை நிறுத்தி நாதசுரக் கலைஞர்கள் ஆதரிக்க முன்வந்தால் அது தமிழ்க்கலையை வளர்ப்பதுடன் பல விதங்களிலும் நன்மையாகும். நமது நாதசுரக்கலைஞர்கள், இதுபற்றி ஏன் கிளர்ச்சி செய்யப்படாது?

0 0 0

வீட்டிலிருக்க சகிக்க முடியாததால், நண்பருடன் ஒரு சினிமாப்படம் பார்க்கச் சென்றேன்.

வாலிபத்தில் ஒரு நாளைக்கு இரண்டு படமும் பார்த்ததுண்டு. ஆனால் வயதாக ஆக சினிமாப் பார்க்க மனமில்லை. பல மாதங்களுக்குப் பின் 'பிரகலாதா' படம் பார்க்கச் சென்றேன். பிரகலாதாவில் பிரகலாதனாக நடித்த பேபி ரோஜாரமணியின் தோற்றத்தை இன்னும் மறக்க முடியவில்லை. சினிமா உலகிலே அக்குழந்தைக்கு இனி மிக நல்ல காலமுள்ளது.

மலையிலிருந்து உருட்டிவிட்டாலென்ன? கல்லைக் கட்டிக் கடலில் பாய்ச்சினாலோ யானையை ஏவிவிட்டாலோ நஞ்சூட்டினாலோ, வேறு என்ன செய்தாலோ கடவுளையே கதி என நம்பினவருக்கு, அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை என்பதை அந்தப் படம் நன்கு அறிவுறுத்தியது. அவ்வளவு துன்புறுத்திய தகப்பன் இரணியன் மீதும் அக்குழந்தைக்கு சிறிதாவது வெறுப்பில்லை! அவ்வளவு பக்குவம் நமக்கும் வருமா?

0 0 0

அளவுக்கு மிஞ்சிய டான்ஸ்கள் இப்பக்திப் படத்தில் எதற்கு? இவ்வித டான்ஸ்கள் அதிகம் இருந்தால்தான் மக்கள் படம் பார்க்க வந்து வருவாய் கிடைக்குமென்கிறார் நண்பர். இரு குருமார்களாக வந்தவர்களின் நடிப்பு மிகைப்படவும் இயற்கைக்கு மாறுகவும், குருமார்களை இழிவுபடுத்துவது போலவுமுள்ளது.

சைவா-வைணவப் போட்டிகள் மறைந்துள்ள இக்காலத்திலே, அதை மறைமுகமாகப் புகுத்தவேண்டியது அவசியம் தானா? தணிக்கையாளர்கள் இவ்விஷயத்தில் சற்றே கவனமாயிருப்பது நல்லது.

சில குறைகளிருப்பினும் மொத்தத்தில் இது நல்ல படம். நல்ல நடிப்பு. நல்ல கூட்டம்.

0 0 0

சொற்றுணை வேதியன்
சோதி வானவன்,
பொற்றுணைத் திருந்தடி
பொருந்தக் கைதொழ,
கற்றுணைப் பூட்டியோர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது
நமச்சிவாயவே.

—அப்பர் அடிகள்

## செய்திச் சுருக்கம்

### மக்கள் வங்கியின் கடனுதவி

கோட்டை, சனி

### சிந்தாத்திரை மாதா திருநாள்

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியில் உள்ள யாத்திரைத்தலங்களில் ஒன்றான வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் கொடியேற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஷ்டவசமாக காங்கிரஸ் தலைவரான நிஜலிங்கப்பாவுக்கும், பிரதமர் இந்திராவுக்கும் ஒத்துழைப்பு இல்லாது போனதால்தான் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. சமரசத் தீர்மானம் நிறைவேறியும், இருதலைவர்களுக்கிடையிலும் விரும்பத்தக்க நல்லுறவு இருப்பதாகத் தெரியவில்லை, இருவருள் யார் பெரியவர் என்று உள்ளூர புகைச்சல் இருந்து வருவதும் தெளிவு.

நாடு வெள்ளைக்காரருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காங்கியும். இதற்குக் காங்கிரஸ் தலைவரோ அல்லது அவரைச் சேர்ந்த 'ஸிண்டிகேட்' கோஷ்டியினரோ தயாரா? இதற்குத் தயாராக இல்லாவிடில் நிஜலிங்கப்பா உள்ளிட்டு, 'ஸிண்டிகேட்'டைச் சேர்ந்த தலைவர்கள், காங்கிரஸ் நிர்வாகப் பதவிகளிலிருந்து விலகிவிடுவதே அவர்களுக்கும் காங்கிரசுக்கும், நாட்டுக்கும் நல்லதாகும். காங்கிரசைவிட நாடு பெரியது என்பதையும் நாட்டின் தலையெழுத்து பிரதமரின் கையிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளதென்பதையும் மறப்பதற்கில்லை.

---

இம்மாதம் 17,ம் 18,ம் திகதிகளில்

# யாழ்ப்பாண நகரில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

பேராதனை பல்கலைக்கழக இளைஞர் ஒன்றியம் அளிக்கும் முத்தமிழ்விழா இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

17-ம் திகதி மாலை நாதஸ்வரகலாநிதி என். கே. பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வரக்கச்சேரியும், இளைஞர் ஒன்றியம் அளிக்கும் பராஜசிங்கத்தின் 'பிரளயம்' நாடகமும் நடைபெறும்.

18-ம் திகதி காலை பேச்சுப்போட்டி இறுதித் தெரிவு ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன தமிழ்நிகழ்ச்சி அதிகாரி நாவற்குழியூர் நடராசன் தலைமையில் கவியரங்கு ஆகியனவும் விசேஷ கருத்தரங்கொன்றும் நடைபெறும்.

பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் கா. குலரத்தினம் தலைமையில் ''வடக்கிலும் கிழக்கிலும் பொருள் வளம்பெருக'' என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் விரிவுரையாளர்கள்சோ. செல்வநாயகம், எஸ். வன்னியசிங்கம் ஆகியோரும், கே. பற்குணமும் சொற்பொழிவாற்றுவார்கள்.

18-ம் திகதி இரவு ஈழநல்லூர் பொன். சுந்தரலிங்கம் குழுவினரின் சங்கீதக் கச்சேரியும், குமாரி லீலா நாராயணனின் நடன நிகழ்ச்சியும் இடம்பெறும்.

(கா. நி)

## காந்தி பற்றி பேச்சுப்போட்டி

கோட்டை, சனி

கொழும்பு விவேகானந்த சபையினரின் ஆதரவில் வருகிற மாதம் 2ம் திகதி காந்தி ஜயந்தி நூற்றுண்டு, விழாவை முன்னிட்டு பேச்சுப் போட்டி நடைபெறவிருக்கிறது.

மகாத்மாகாந்தி பற்றி நடைபெறும் இப் பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கு ரொக்கப்பரிசில்கள் வழங்கப்படுமென பரீட்சைச் செயலாளர் அறிவித்துள்ளார். இம் மாதம் 15ம் திகதி விண்ணப்பமுடிவு திகதி ஆகும்.

## காந்தி ச.ச.நிலையம்

புத்தூர், சனி

புத்தூர் கிராமசபைக்குட்பட்ட 2ம் வட்டாரத்தில் அமைக்கப்பட்ட மகாத்மா ஜனசமூக நிலையக்கட்டடத்தை 13ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. திருநாவுக்கரசு திறந்துவைத்தார். காரியதரிசி நன்றி தெரிவித்துப் பேசினார்.

## ரதோற்சவம்

சுழிபுரம், சனி

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா இம்மாதம் 15ம் திகதிநடைபெறவிருக்கிறது

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

கழகம் ஏற்பாடுகள் செய்து வருகின்றது. இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாட்டங்கள் நடக்கும்.

மறைந்த முதல் அமைச்சர் அண்ணாவின் பிறந்த நாள் இம்மாதம் 15-ம் திகதி வருகிறது. இது அண்ணாவின் 60 ஆண்டு நிறைநாளாகும். இந்த பிறந்தநாளை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாட தி. மு. கழகம் ஏற்பாடுசெய்து இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ளமுக்கிய நகரங்களில் அண்ணாவின் 60 சிலைகள் திறக்கப்படுகின்றன.

மற்றும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. சென்னையில் அண்ணா பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாட தி. மு. [illegible]ப்பாடுபோடுதல் போன்ற நிகழ்ச்சிகள் அன்று நடைபெறும்.

அன்றுமாலை தி. மு. க. சார்பில் சேத்துப்பட்டில் அண்ணாபிறந்தநாள்பொதுக்கூட்டம் நடக்கிறது. அதில் அமைச்சர் நெடுஞ்செழியன் கலந்துகொள்கிறார்.

17-ம் தேதிமாலைமாவட்ட தி. மு க சார்பில் பெரம்பூர் பகுதியில் அண்ணா பிறந்த நாள் பொதுக்கூட்டம் நடைபெறும்.

21-ம் திகதி அண்ணா பிறந்தநாள் ஊர்வலம் நடக்கிறது. மிகப்பெரிய அளவில் ஊர்வலத்தை நடத்ததிட்டமிட்டிருக்கிறார்கள்.

அண்ணா பிறந்தநாளையொட்டி சென்னை மாவட்ட சீரணியினர் மெரினா கடற்கரையில் பொது அரசாங்கம் ஒன்று அமைத்து இருக்கிறார்கள்.

அதன் திறப்புவிழா 14-ம் தொண்டர்கள் 3 [illegible] அண்ணா சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைக்கிறார்கள். பின்பு அங்கிருந்து அணிவகுத்து மவுண்டு ரோட்டில் உள்ளசீர[illegible] அலுவலகத்துக்கு வரு[illegible]ர்கள்.

சீரணி அலுதலகத்தில் 5 மணிக்கு அண்ணா சிலை திறப்பு விழாநடக்கிறகிறது. அண்ணாசிலையை முதல் அமைச்சர் கருணாநிதி திறக்கிறார். விழாவுக்கு முத்துசாமி தலைமை வகிக்கிறார்.

அண்ணா பிறந்த நாளையொட்டி 25 பொலிசாருக்கு விசேஷ விருதுகள் வழங்கப்படுகின்றன. இதற்கு 'தமிழக முதல்வர் விருது' என்று பெயர்.

இந்த விருது வழங்கும் விழா 15-ம் திகதி லேத்தில் நடக்கிறது. முதல்அமைச்சர் கருணாநிதி விருதுகளை வழங்குகிறார்.

---

எச் ஏ மௌயுத், எஸ் எச் எம் மௌயூத். என் நடராஜா, சி ஆர் நாகராஜா, என் நல்லையா, எம் நிமலேந்திரன், ஆர் நித்தியானந்தன் எஸ் பழமுதுசிங்சிங்கம், ஜி கே போல், எஸ் பேரானந்தசிவம், எம் ரவீந்திரன், பி இராஜதுரை கே இராமநாதன் பி சற்குணராஜா, ஏ செல்வராஜா, வி சேந்தன், ஜெ ஜி சாந்திகுமார், கே சிவகுமாரன், கே சிவானந்தன் ஜெ சிவநாதன், ஏ எஸ் என் சிவனேசன், பி சிறிகாந்தா, சி ஏ தளநாயகம், ரி நவசிலிங்கம், பி தர்மரத்தினம், கே தேவசகாயம், கே தேவராஜா, எஸ் தியாகலிங்கம், எஸ் திருநாவுக்கரசு, ஏ துரைராஜசிங்கம். எஸ் வித்திராஜா, கே விநாயகரத்தினம், எம் விக்கினேஸ்வரன், எஸ் ஜி விஜயசிறி, எஸ் விஜயகுமார், வி ஏ ஞானேஸ்வரன், செல்வி என் கருணாநிதி, எஸ் எஸ் மார்க்கண்டு, ஜெ ஜி மேவின், கே மாணிக்கவாசகன், ஏ இராஜலிங்கம், கெ பி டபிள்யு ராஜசிறி, கே சிறிரங்கன், என் சுகுமாரன். ஆர் சுந்தரமூர்த்தி. கே வடிவேல், ஆர் கனேஷ்வரநாதன் வி ஞானேஸ்வரன், கே சிறிராம், எம் குலசிகாமணி, எஸ் சிவதாஸன், எஸ் சிறிகாந்தன்

---

நாடக விமர்சனம்

# வீடு யாருக்கு?

க. பேரன்

கொழும்பு ஹாவ்லொக டவுண் லும்பினி கலாமண்டபத்தில் 'வீடுயாருக்கு?' என்ற சமூக நாடகம் அரங்கேற்றப்பட்டது. கொழும்பில் நிலவும் வீட்டுப் பிரச்னையை மையமாக வைத்தே கதைபின்னப்பட்டுள்ளது.

அப்புஹாமி என்ற சிங்களவருக்குச் சொந்தமான வீட்டில் சந்தனநாடாரின் குடும்பம் வாடகைக்கு குடியிருக்கிறது. இதே வீட்டில் யாழ்ப்பாணத்துக் குடும்பம் ஒன்றும் குடியிருக்க வருகிறது. யாழ்ப்பாணத்துத் தம்பரின் மகள் லலிதா தன் தமக்கையுடன் கோபித்துக் கொண்டு தமையன் சுந்தரமூர்த்தியையும் தகப்பனையும் கூட்டிக் கொண்டு சந்தனநாடாரின் வீட்டில் ஒரு அறை எடுத்துக் குடியிருக்க வருகிறாள். சந்தன நாடார் பிரஜாவுரிமையற்ற (வி. ஆர். பி.) வணிகர். இவரது வீட்டில் குடிபுகுந்த லலிதாவின் தமையன் ஆறுமுகம் எப்படியும் வீட்டைத் தமது சொந்தமாக்கி விடவேண்டும் என்ற தந்திரத்தில் பலவிதமான திட்டங்களையும் தீட்டுகின்றான். சந்தனநாடாரைக் 'கள்ளத்தோணி' என்று பெட்டிசன் எழுதிப்போடுகிறான். இதனால் பயந்த நாடாரின் குடும்பம் இரவோடிரவாக வேறிடம் செல்லுகிறது. ஆனாலும் வீட்டை அவர் வேறு ஒருவருக்கு வாடகைக்குக் கொடுத்துவிடுகிறார். இதனால் வெகுண்ட ஆறுமுகம் புதிய மனிதருக்கும் பயன்படாமல் வீட்டை இடித்துத் தள்ளும்படி செய்கிறான். ஆறுமுகத்தின் சுயநலத்தன்மையாலும் கள்ளத்தனங்களாலும் தம்பருக்குக் கிடைக்கக் கூடிய வீடு கூடகடைசியில் யாருக்கும் பயன்படாமல் போகிறது. நாடாரின் மகன்மோகனும் கொழும்பில் மதிப்பிழந்த பெண்ணான லலிதாவும் அளவு மீறிக் காதல் கடிதம் எழுதி விளையாடுகிறார்கள். காதலிப்பது வெறும் போக்கு என்ற தொனியில் இவர்கள் நடந்து கொள்கிறார்கள். இதைநகைச் சுவை என்பதா அல்லது 'சீரியஸ்' ஆக எடுப்பதா என்பது புரியவில்லை.

சந்தனநாடாராக கே. ஏ. ஜவாஹர் தோன்றி மிகவும் உணர்ச்சிகரமாக நடித்தார் 'அவளைக் கொன்றவள் நீ' யில் இன்ஸ் பெக்டராக நடித்த ஜவாஹர் இப்படி உணர்ச்சி ததும்ப அழகாக வசனம்பேசி ஒரு குணசித்திர பாத்திரமாகத் தோன்றினார் என்று வியக்கும் படியாகஇவரதுநடிப்புஇருந்தது. தம்பராகஎஸ். எஸ்- கணேசபிள்ளை தோன்றி மிக மிக இயல்பாகச் செய்தார். இவரது நடையும், பேச்சும் சுருட்டும், பார்வையும் ஒவ்வொரு கணமும் கவர்ந்த வண்ணமே இருந்தன. இவரது மகள் லலிதாவாக வந்த திருமதி சரசாம்பிகை சந்திரசேகரம் தமது பாத்திரத்தை உணர்ந்து மிகத் திறமையாகநடித்தார். இவரது பாத்திர இயல்புக் கேற்பவே துடுக்காகப் பேசிமிடுக்காக நடித்தார். நாடகத்தில் முக்கியபாகமே இவர்தான் எனலாம். தமையனுடன் கோபித்துக் கொள்வதும் மகளுடன் காதல் கேளிக்கை புரிவதும் மிக மிக இயல்பாக இருந்தன. இவரது தமக்கை புஷ்பமாக செல்வி மற்றில்டாபிள்ளை தோற்றினார். சிறப்பாகவே செய்தார். தங்கையைக் கோபிக்கும் கட்டங்களில் மட்டும் கொஞ்சம் செயற்கைகலந்திருந்தது. தமையன்சுந்தரமூர்த்தியாகவந்த எஸ். ஆறுமுகம் நல்லபடி நடித்தாலும் பல கட்டங்களில் மிகவும் அவசரப்பட்டு அதிகமாகச் சத்தமிட்டார். என்றாலும் இவரிடமும் இயல்பான நடிப்பைக் காணமுடிந்தது. மோகனாக நடித்த எஸ். பத்மநாதன் தமது பாத்திர இயல்புக்கு ஏற்பவே சிறப்பாகச் செய்தார். முதன்முதல் லலிதாவைக் கண்டு ஆச்சரியப்படும் கட்டத்தில் இவர் அவசரப்பட்டுத் திரையைமூடி, இவரது உணர்ச்சிக்குத் தடைபோட்டுவிட்டார்கள். என்றாலும் ராஜ் மன்றத்தாரின் 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' 'ஊர் சிரிக்குது' நாடகங்களைவிட பத்மநாதன் இந்நாடகத்தில் சிறப்பாகவே செய்துள்ளார். இவரிடம் சுறுசுறுப்பான நடிப்பைக் காணமுடிந்தது. சந்தனநாடாரின் மனைவி எலிஸபெத்தாக திருமதி ஜானகி வேலாயுதம் தோன்றினார். இவர் அசல் இந்திய நாடாரப் பெண் போலவே பேசிச் சிறப்பாக நடித்தார். புஷ்பத்தின் கணவராக எஸ். பரராஜசிங்கம் வருகிறார். இவரது தோற்றத்தைப் போலவே குரலும் பெரிதாக இருந்தது. சிரித்துச் சிரித்து இவரும் நன்றாகவே நடித்தார்.

காட்சியமைப்புகளை வழக்கம் போலவே கதிர்காமத்தம்பி (தம்பி) பொறுப்பேற்றிருந்தார். ஒரு கொழும்பு வீட்டிற்குள் இருந்துகொண்டே அங்குள்ள நடவடிக்கைகளைக் கவனிப்பதுபோன்ற நேரடி உணர்வை இவரது காட்சியமைப்பு ஏற்படுத்தியது எனலாம்.

மொத்தத்தில் சமீபகால நாடகங்களுடன் ஒப்பிடும்போது 'வீடு யாருக்கு' ஒரு நல்ல தயாரிப்பு. தரமான நடிகர்களைத் தேர்ந்து நல்ல முறையில் அரங்கேற்றப்பட்டது.

---

# சுருக்கம்

## மக்கள் வங்கியின் கடனுதவி

கோட்டை, சனி

கைத்தறி நெசவாளர்களின் நூல் பிரச்னை விரைவில் தீரலாம் என எதிர்பார் கப்படுகிறது. கைத்தறி நெசவுக்கென கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கைத்தறிக்குத் தேவையான நூலை இறக்குமதி செய்வதற்காக மக்கள் வங்கி கடன் வழங்கத் தீர்மானித்துள்ளது.

0 0 0

## மன்னாரிலும் வேலை நிறுத்தம்

மன்னார், சனி

மீன்பிடி கூட்டுஸ்தாபன ஊழியர் வேலைநிறுத்தம் தற்போது மன்னார்பகுதியையும் பாதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மீன்பிடிக் கூட்டுஸ்தாபன ஊழியர் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து இங்குள்ள மீன்பிடி கூட்டுஸ்தாபன ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளதாகவும் இதனால் பேசாலையின் மீன்தொழிற்சாலைவேலைகள் எதுவும் பாதிக்கப்படவில்லையெனவும் வழமைபோல் நடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

## நேர்முகப் பரீட்சை

கோட்டை, சனி

முதலாம்தர, மூன்றும்தர அதிபர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை அக்டோபரில்நடைபெறும்எனக் கல்வியமைச்சைச் சேர்ந்த ஒரு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அரசினர் வித்தியாலயங்களில் காலியான இவ்அதிபர் பதவிகளுக்கு 16 ஆயிரம் தமிழ், முஸ்லிம், சிங்கள ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளனர். நவம்பர், ஜனவரி மாதங்களில் இப்பதவிக்கான நியமனங்களைச் செய்வதற்காக இந்நேர்முகப் பரீட்ரையைக் கல்வியமைச்சு விசைவாக நடத்தவுள்ளது.

0 0

## சோளச் செய்கைக்கு 50000 ஏக்கர்

அனுராதபுரம், சனி

சோளம் பயிரிடுவதற்காக அனுராதபுரப் பகுதியில் 50000 ஏக்கர் நிலம் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிஅரசாங்க அதிபர் திரு. ஜவன் சமரவிக்கிரம இப்பயிர்ச் செய்கைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில் எடுபட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியில் உள்ள யாத்திரைத்தலங்களில் ஒன்றான வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் கொடியேற்ற வைபவத்துடன்ஆரம்பமாகிறது.

தினமும் ஆராதனைகள் மண்டைதீவு கட்டளைக்குரவர் வண. பிதா. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமிகளால் நிறைவேற்றி வைக்கப்படும்.

இம்மாதம் 24-ம்திகதி மாலை திவ்விய சற்பிரசாத சுற்றுப் பிரகாரத்துடனும் 24-ம்திகதி காலை பெரிய பாடல் பூசையுடனும், திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் உற்சவம் முடிவடையும்.

23-ம், 24-ம் திகதிகளில் யாழ்ப்பாணம், இறுப்பிட்டி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலிருந்து இத்தேவாலயத்துக்கு விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## நெல்விலையைக் கூட்டுக

மிகிந்தலை, சனி

தேசீய அரசாங்கம் விவசாயிகளை உண்மையாக மதித்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என நோக்கம்கொண்டால் நெல்லின் உத்தரவாதவிலையை 14 ரூபாவிலிருந்து 16ரூபாவாக உயர்த்தவேண்டும் எனத் தம்புத்தேகம கிராம சபை பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவையும் காணிவிவசாய அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவையும் கோரியுள்ளது.

0 0

## தாக்கியதாக புகார்

சுழிபுரம், சனி

சுழிபுரம் பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றின் தலைவர் சங்க நிர்வாகிகளில் ஒருவரால் பாதையில் வைத்துத் தாக்கப்பட்டதாக சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

......

## பாராட்டு விழா

பருத்தித்துறை, சனி

உபசபாநாயகர் திரு. மு சிவசிதம்பரத்தின் சேவைகளைப் பாராட்டுமுகமாக கரவெட்டிப்பகுதியில் இம்மாதம் ஒரு பாராட்டு விழாவை நடாத்த உடுப்பிடி தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணி ஒழுங்கு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org